தமிழ் தகவல் நடுவம்
TAMIL INFORMATION CENTRE

# மீட்சி

January - March 2021 | MEEDCHI | காலாண்டு இதழ் – 01

அமரர்
**வரதகுமார்**
அவர்களின்
2ம் ஆண்டு நினைவுச்
**சிறப்பிதழ்...**

ஒன்றாய்
திரள்வோம்!
ஓங்கி
ஒலிப்போம்!

## நம்மவர்



என். செல்வராஜா

தமிழ் அருங்காட்சியகம் இலண்டன்
TAMIL MUSEUM LONDON

கே.ஸ் சுபாஸ் எழுதும்...
தமிழ் அருங்காட்சியகம்
இலண்டனின்...
பயணத் தொடர்...
அடுத்த இதழிலிருந்து...



# வரதகுமாருடன் நாங்கள்!

**அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாய் திரள்வோம்! ஓங்கி ஒலிப்போம்!

ஈழமாறன்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளது.தீர்மானத்துக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும், நடுநிலையாக 14 நாடுகளும் வாக்களித்திருந்தன.குறிப்பாக இந்தியாவும்,ஜப்பானும் நடுநிலை வகித்தன.இந்தியா நடுநிலை வகித்தாலும்,தீர்மானத்தின் மீதான உரை மிக்க காட்டமாகவும், தெளிவாகவும் இருந்தது.பொறுப்புக்கூறல், அதிகாரப்பகிர்வு போன்ற விடையங்களை முக்கியப்படுத்துவதாக அந்த உரை அமைந்திருந்தது.

இதை வெற்றியடையச் செய்ய பல நாடுகளின் உழைப்பும்,தமிழர் அமைப்புகளின் அயராத அழுத்தங்களுமே காரணம். தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் இணைந்து வைத்த கோரிக்கை, அதற்கு ஆதரவாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் இருநூறுற்கு மேற்பட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து விடுத்த வேண்டுகோள் – நாம் ஒன்றாய் ஒரே குரலில் கேட்கிறோம் என்ற செய்தியை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டின. நாமெல்லாம் எதிர்பார்த்த விடையங்கள் தீர்மானத்தில் இல்லையென்றாலும், இலங்கையை ஐ.நா.வின் கண்காணிப்பில் வைத்திருக்கவும், இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிரான அமெரிக்காவின் அதிருப்தியை வெளிப்படுத்தவும் இந்தத் தீர்மானம் பயன்படுத்தப்பட்டிருப்பதே உண்மை. இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை தமக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டுள்ளது. தமிழர் தரப்புகளிலிருந்து இந்தியாவின் நிலைப்பாடு பற்றி பல்வேறு விமர்சனங்கள் எழுந்தவண்ணம் உள்ளன. இந்தியாவின் நிலைபற்றி விமர்சிப்பவர்களும் முன்வைக்கும் ஒரு முக்கிய விடையம் இந்தியாவோடு இன்னும் நெருக்கமாக நாங்கள் வேலை செய்ய வேண்டும் என்பதுதான்.

கடந்த காலங்களைவிட, இந்தமுறை நடந்தேறிய ஒரு முக்கிய விடையம்,தமிழர் தரப்பு ஒரே குரலில் கோரிக்கைகளை முன்வைத்ததுதான். நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு முற்றுப்புள்ளியல்ல. 40 நாடுகள் இத்தீர்மானத்தைக் கொண்டுவருவதில் ஒருங்கிணைந்து செயற்பட்டன என்பது ஒரு நல்ல செய்தி. இன்று பற்றவைத்துள்ள தீயை அணையாமல் பாதுக்காப்பதே இனி எமது வேலையாக இருக்கவேண்டும். நாடுகளின் ஆதரவுகளைத் திரட்டுவதில், எதிர் நிலையிலுள்ள நாடுகளுக்கு எமது நிலையை எடுத்துக் கூறுவதிலும் ஒருமித்த நடைமுறை பின்பற்றப்படவேண்டும். ஒரு நாட்டுடன் பல்வேறு அமைப்புகள்,அரசியல் கட்சிகள் சந்தித்து அவர்களுக்குச் சலிப்பு ஏற்படுத்தாமலும், குழப்பத்தை உண்டாக்காமலும், ஒன்றாக ஒரே குரலில் எமது கோரிக்கைகள் முன்வைக்கப்படல்வேண்டும்.

இந்த அணுகுமுறை இந்தியா விடையத்தில் இன்னும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும். வட கிழக்குத் தாயகம்,மலையகம்,புலம்பெயர் அமைப்புகள் –இவற்றிடையே ஒரு புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொது வேலைத்திட்டமும் , ஒருமித்த கொள்கையும் இருத்தல்வேண்டும். இலங்கையில் தமிழர்களைப் பலப்படுத்துவதால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு எந்தளவுக்கு அது உறுதியாக இருக்கும் என்ற விளக்கம் இந்தியாவுக்குப் புரியவைக்கவேண்டும்.'இந்தியாவுக்கு எல்லாம் தெரியும்' என்பது நம்மவர்கள் சிலரின் வாதம்.

பூகோள அரசியலில் எந்த நாடும் தனது சொந்த நலன் கருதியே எந்தப் பிரச்சினையிலும் தலையிடும். எம்மைப் பலப்படுத்துவதால் அவர்களுக்கு என்ன நன்மை என்ற ரீதியில் எமது அணுகுமுறை இருக்கவேண்டும்.

தமிழ்நாட்டின் தேர்தலில் கிட்டத்தட்ட 10 கட்சிகள் போட்டியிடுகின்றன. நிலப்பரப்பில் பலமடங்கு சிறிய வட –கிழக்கிலும் 10 கட்சிகள் உள்ளன.எந்தக் கட்சியும் தமிழின விடுதலைக்கு எதிரானவர்களல்ல. வெறும் தற்பெருமைக்காகவும்,சுய லாபத்திற்காகவுமே பல கட்சிகள் தோற்றம் பெறுகின்றன.வட –கிழக்குக்கென ஒரு சுயாட்சி அலகு கிடைத்தபின்பு பல கட்சிகள் இருப்பது ஜனநாயக விழுமியமாகக் கொள்ளலாம்.ஆனால் இன விடுதலைக்காகப் போராடும் ஒரு இனத்திடையே பல கட்சிகள் இருப்பது ஒரு பின்னடைவே.

புலம்பெயர் நாடுகளிலும் குறிப்பாக இங்கிலாந்தில் பல்வேறு தமிழ் அரசியல் அமைப்புகள் உள்ளன. தத்தமது அமைப்புகளை முன்னிலைப்படுத்தியே அவர்களது செயற்பாடுகள் அமைகின்றன. நீயா?நானா? என்ற சிந்தனையோடுதான் கூடுதலாக வேலை செய்கின்றார்கள். காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுப்பது உண்மை.ஆனால்,அவை ஒருங்கிணைந்த முயற்சிகளாக இருப்பின்,நேரவிரயம்,மனிதவலு விரயம்,பொருள்விரயம் ஆகியவற்றைத் தவிர்க்க உதவியாக இருக்கும். இதற்கு அடிப்படைத் தேவை புரிந்துணர்வும்,பொதுநோக்கும் விடுதலைப்பற்றுமாகும்.

ஐ.நா.வும் அதன் உறுப்பு நாடுகளும், முக்கியமாக இந்தியாவை எமது நிலைப்பாட்டுக்கு ஈர்த்தெடுக்க எமக்கு இன்று தேவை ஒரு பாரிய பொதுவேலைத்திட்டம் .பலரின் பங்களிப்பு, உலக நாடுகளைக் கையாளும் புத்திக்கூர்மையுடைய இராசதந்திர வல்லுநர்கள், அர்ப்பணிப்போடு செயலாற்றும் தொண்டர்கள் இவைதான் இன்றைய தேவை. ஒரு அரசியல் கட்சியோ, ஒரு அமைப்போ இதைச் செய்துவிட முடியாது. இனத்தின் நன்மை கருதி ஒன்றிணைந்த செயற்பாடு மிக அவசியம். இந்தத் துறைகளில் அனுபவம் வாய்ந்த பல வெளிநாட்டவர்களின் வழிகாட்டல் மிக அவசியம்.

அபிவிருத்தி, நில அபகரிப்பு, குடிசனப்பரம்பல் மாற்றம், குடியேற்றங்கள், அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல்போனோர் விடையம், பலவந்தமான புத்தமத ஆக்கிரமிப்பு, அதிகாரப்பகிர்வு, அரசியல் யாப்பு இப்படியாக நீண்டு செல்லும் எமது பல்வேறு பிரச்சினைகளை ஒரு அமைப்போ, அரசியல் கட்சியோ கையாள முடியாது.

தமிழர்களுக்கென ஒன்றிணைந்த ஒரு தேசிய சபை உருவாக்கப்பட்டு,எமது பிரச்சினைகளைக் கையாளும் பொறுப்பு அதில் இணைந்துள்ள அரசியல் கட்சிகள், அமைப்புகளிடையே பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். தாயகம், மலையகம், புலம்பெயர் நாடுகளிலுமுள்ள சகல அரசியல் கட்சிகள், அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு பொதுச் சபை உருவாக்கப்பட்டு அது தாயகத்திலும், புலம் பெயர் நாடுகளிலும் ஒரு புரிந்துணர்வோடு செயற்படவேண்டும். இது இன்னொரு அமைப்பாகவன்றி பலரையும் இணைக்கும் ஒரு சபையாகச் செயற்படவேண்டும். இந்தியாவுடனான அணுகுமுறைக்கு ஒரு சிறப்புச் செயற்குழு இந்தச் சபையிலிருந்து தெரிவு செய்யப்பட்டு ஈடுபடவேண்டும். தமிழ் நாட்டிலும், டெல்லியிலும் அவர்களது செயற்பாடுகள் தீவிரமாக இருக்கவேண்டும்.

இதற்கெல்லாம் அடிப்படைத்தேவை சுய நலமற்ற, தமிழின விடுதலை ஒன்றே இலட்சியமாகக் கொண்டு உழைக்கக்கூடிய செயற்பாட்டாளர்கள். சில அமைப்புகளூடாகச் சிலர் அப்படியாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தாலும், எண்ணிக்கை அதிகமாக வேண்டும். அதற்கு,

'ஒற்றுமையாய் உயர்வோம்! உலகை வெல்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கு

சிவ. ச. சிவக்குமார்
கோசைநகரான் தமிழர்
தொல்லிசைக் கருவியகம்,

கடல் நத்தைகளுக்கு அல்லது அவற்றின் ஓடுகளுக்கு உள்ள பெயராகும். சங்கு எனும் பெயர் பொதுவாக பெரிய, சுருள் அமைப்புள்ள, தூம்புக் குழாய் வழியுள்ள நத்தைகளுக்கு வழங்கப்படுகிறது. நமக்கு இயற்கையாக கிடைக்ககூடிய ஒரு சில இசைக்கருவிகளுள் சங்கு முதன்மையானது. சங்கினை வலம்புரிச்சங்கு, இடம்புரிச்சங்கு, சலஞ்சலம், பாஞ்சக சன்னியம் எனப் பலவகையாகப் பிரித்துள்ளனர். வலம்புரிச் சங்கு அரிதானது ஆகையால் அவற்றை வழிபாட்டிற்கு பயன்படுத்துகிறார்கள். ஆயினும் சலஞ்கலம், பாஞ்ச சன்னியம் ஆகிய இவ்விரண்டும் மிகமிக அபூர்வமானது. இடம்புரிச்சங்கில் எண்ணற்ற வகைகள் உள்ளன. அவற்றில் போர் சங்கு, பால் சங்கு (அ) வெண்சங்கு, பால்மடி சங்கு, இளஞ்சிவப்பு சங்கு, கீற்றுச்சங்கு, சிலந்தி சங்கு எனப் பலவகையுண்டு.

உலகில் சுட்டாலும் வெண்மை தரக்கூடிய பொருட்கள் இரண்டு உள்ளன. ஒன்று சங்கு மற்றொன்று சாணம். நம் முன்னோர்கள் தங்கள் வாழ்வியலில் இவ்விரண்டையும் வெகுவாக பயன்படுத்தி ஆரோக்கியமான வாழ்வினை வாழ்ந்திருக்கிறார்கள். சங்கினை தம் மரபிலே முதற் சங்கு, இடைச் சங்கு, கடைச் சங்கு என பயன்படுத்தி இருக்கிறார்கள். முதற் சங்கு என்பது ஒரு குழந்தை பிறந்த உடன் அதற்கு முதன்முதலில் தன் தாய் பாலினை அருந்தும்போது இசைக்கப்படுவது. குழந்தைக்கு தாய்ப்பாலினை முதல்முறையாக வலம்புரிச்சங்கினால் கொடுப்பதும் வழக்கத்தில் இருந்தது. இடைச் சங்கு என்பது ஒரு மனிதனுக்கு தன் வாழ்வியலில் அடுத்து கட்டத்திற்கு செல்லும் நிகழ்வாக கருதப்படுவது திருமணம். அத்திருமணத்திலே மணமகன் மணமகளுக்கு மங்கள நாணினை கட்டும் பொழுது இசைக்கப்படுவது. கடைச் சங்கு என்பது தன் வாழ்வியல் முடிந்து தன் உடம்பில் இருந்த உயிர் பிரிந்த பின்பு இசைக்கப்படுவது. இன்றும் இவ்வழக்கம் தென் தமிழகத்தில் புழக்கத்தில் உள்ளது. குறிப்பாக புதுக்கோட்டை, சிவகங்கை பகுதிகளில் அதிகம் புழக்கத்தில் உள்ளன. ஆனால் இன்று நம் அனைவருக்கும் தெரிந்தது கடைச் சங்கு மட்டும் தான். மேலும் சங்கினில் எண்ணற்ற மருத்துவ குணங்கள் உள்ளன.

நாம் சங்கினை இசைக்கும் பொழுது நம் சுவாசமானது சீர்பெற்று உடல் ஆரோக்கியம் வலுப்பெறுகிறது. இதய நோயாளிகளும் காச நோயாளிகளும் சுவாசப் பயிற்சிக்காக சங்கினை பயன்படுத்தலாம். நாகரீக மாற்றத்தாலும் மேலைநாட்டு கலாச்சாரத்தின் மீதுள்ள மோகத்தினாலும் இன்று சங்கானது அமங்கல பொருளாக கருதப்பட்டு கடைச்சங்காக மட்டுமே பயன்படுத்தப் படுகிறது. இந்நிலை மாறி சங்கானது மீண்டும் தமிழர் வாழ்வியலில் அத்தியாவசிய பொருளாக மாற வேண்டும் என்பதே விண்ணப்பம். சங்கினை இசைப்போம் தடையில்லா சுவாசத்தோடு ஆரோக்கியமாக வாழ்வோம்.





## நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பொன்மொழிகள்

எத்தனை தியாகங்கள் செய்வதாக இருந்தாலும் அதர்மத்தை எதிர்த்து போர் புரிவது ஒன்றுதான் ஒவ்வொரு மனிதனுடைய தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

இரவு நம்மை சூழ்ந்திடும் பொழுதெல்லாம் காலைப் பகலவன் வெளிச்சம் நம்மை நெருங்கி விட்டது என்பதே அர்த்தம்.





## பிடல் காஸ்ட்ரோ பொன்மொழிகள்

நீ செல்லும் பாதையில் தடைகள் எதுவும் இல்லை என்றால் அது நீ போகும் பாதையே இல்லை. வேறு யாரோ போன பாதை.

விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் ஒருபோதும் உறங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியசீலனின் மலரும் நினைவுகளில்

# ஈழ விடுதலைப் போராட்டம்



சாத்வீக வழியில் ஆரம்பித்த தமிழ் மக்களின் ஈழ விடுதலைப் போராட்டம் பின்னர் ஆயுத ரீதியான போராட்டமாக பரிணமித்து இன்று பல்வேறு சவால்களின் மத்தியில் ஒரு அரசியல் -இராஜதந்திர போராட்டமாக சர்வதேசமயப்பட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில், தமிழ் மக்களின் ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டத்தின் தோற்றுவாயாக இருந்த தமிழ் மாணவர் பேரவையின் ஸ்தாபக உறுப்பினர் என்ற வகையில், ஈழ விடுதலைப் பயணத்தை என்னால் முடிந்தளவு நினைவுபடுத்தி நேர்மையாகவும் உண்மையாகவும் பதிவு செய்வது எனது கடமையும் பொறுப்பும் என்று உணர்வதுடன், கடந்த காலத்திலிருந்து பாடங்களை கற்றுக்கொண்டு, உரிமைக்கான போராட்டத்தை எமது இளைஞர்கள் அரசியல் — ராஜதந்திர வழிகளில் முன்னெடுத்து சென்று வெற்றி பெறுவதற்கு இது உதவும் என்ற நம்பிக்கையில் எனது பதிவுகளை சத்தியசீலனின் மலரும் நினைவுகளில் ஈழ விடுதலைப் போராட்டம் என்னும் தலைப்பில் இங்கு தொடர்ந்து எழுதவிருக்கிறேன்.

சிந்தனையும் ஆற்றலும் வீரமும் நிறைந்த இளைஞர்களை தேடிச் சென்று அவர்களை ஒன்றிணைத்து, தமிழ் மாணவர் பேரவையை ஸ்தாபித்தது முதல் தம்பி பிரபாகரனின் போராட்டம் வரை எனது நினைவுகளை இங்கு எழுத முயலுகிறேன். நினைவு பிறழ்ந்து ஏதேனும் பிழைகள் இருந்தால் என்னை மன்னித்து பிழைகளை சுட்டிக்காட்டுங்கள்.

## தமிழ் மாணவர் பேரவையின் தோற்றம்

1960 களிலும் 70 பதின் ஆரம்பத்திலும் இலங்கை அரசியலில் தமிழ் அரசியல் கட்சிகளின் மென் போக்கே தமிழ் மாணவர் பேரவை தோன்ற காரணமாக அமைகிறது.

1960 ஆம் ஆண்டு நடந்த இரண்டு பொதுத் தேர்தல்களிலும் தமிழரசு கட்சியும் தமிழ் காங்கிரசும் வகித்த அரசியல் தளம்பல் நிலைப்பாடும், 1961 ஜனவரியில் சரியான திட்டமிடல் இன்றி தொடங்கிய சத்தியாக்கிரக போராட்ட தோல்வியும், 1965 இல் டட்லி -செல்வா ஒப்பந்தத்தின் மூலம் மாவட்ட சபை அமைக்க தமிழரசு கட்சி எடுத்த முடிவும் சில காரணங்களாக அமைகின்றன. மேலும், இவ் ஒப்பந்தம் தமிழரசு கட்சியை பிளவு படுத்தி ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் தலைமையில் சுயாட்சி கழகம் என்ற மூன்றாவது தமிழர் கட்சி உருவாக காரணமாக அமைந்தது.

மேலும், தமிழ் கட்சிகளின் தலைவர்களின் உறுதி அற்ற தன்மை இக் கட்சிகளின் வாலிப முன்னணி இளைஞர் அமைப்புக்களிடையே விரக்திப் போக்கை தோற்றுவித்ததுடன் ஒரு அரசியல் இடைவெளியையும் ஏற்படுத்தியது. இந்த வேளையில் தான் பொன். சிவகுமாரனின் பொங்கிஎழும் அரசியல் வெளிப்பாடு சிங்கள அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டமாக முனைப்பு எடுக்கிறது. ஆரம்பத்தில் தனி மனித வீச்சாக தொடங்கப்பட்டாலும் அது பிற் காலத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் திரட்சிப் போராட்டமாக உருவெடுத்தது.

தமிழ் மாணவர் பேரவை 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர் ஊர்வலமாக தொடங்கி யாழ் முற்றவெளி மைதானத்தில் எனது தலைமையில் பொதுக் கூட்டத்தை நடத்தி தனது முதல் அரசியல் பயணத்தை தொடங்கியது. அன்று நடந்த மாணவர் எழுச்சிக் கூட்டத்தில் மாணவர்கள் தவிர அரசியல்வாதிகள் எவரும் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதனை நான் திட்டமிட்டே நடத்தினேன். மாணவர் எழுச்சி என்பது அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக மற்றும் மாற்று கருத்துருவாக்கமாக அமைய வேண்டும் என்பதுவுமாகவே இருந்தது.

> **“ஏறத்தாள இருபத்தெட்டு மாதங்கள் பகிரங்கமாகவும் தலைமறைவாகவும் சிறப்பான முறையில் தமிழ்மாணவர் பேரவை செயற்பட்டது.”**

தம்பி பிரபாகரனினால் முதன் முதலாக மாமனிதராக கௌரவிக்கப்பட்ட திரு ஆ.இராசரத்தினம், தமிழீழவிடுதலைப் போராட்டத்தின் ஆயுதப்போராட்ட முன்னோடிகளான மாவீரர்கள் சிவகுமாரன் முத்துக்குமாரசாமி, குட்டிமணி, தங்கத்துரை, நடேசுதாசன், கண்ணாடி பத்மநாதன் (சுங்கான்) மற்றும் பல்வேறு பாடசாலைகளின் மாணவர் தலைவர்கள் என்று பலரையும் உள்வாங்கிய அமைப்பாக மாணவர் பேரவையை நாம் குறிப்பிடலாம். அத்துடன் தமிழீழப் பிரதேசமான இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் பரந்திருந்த பல்வேறு ஊர்களிலும் கிராமங்களிலும் தனித்தனியாகவும் சமூக மற்றும் ஊர்க்குழுக்களாகவும் இயங்கிய தமிழ் இன உணர்வாளர்களை கண்டுபிடித்து ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட அமைப்பொன்றில் இணைத்து உரிமைக்கான போரை முதன்முதலில் முன்னெடுத்த பெருமையும் தமிழ்மாணவர் பேரவைக்கே உண்டு.

ஏறத்தாள இருபத்தெட்டு மாதங்கள் பகிரங்கமாகவும் தலைமறைவாகவும் சிறப்பான முறையில் தமிழ்மாணவர் பேரவை செயற்பட்டது.

பின்வந்த காலங்களில் ஈழ அல்லது தமிழீழ என்பதை முன்னடியாகக் கொண்ட பல ஆயுதப் போராட்ட அமைப்புகள் உருவாகின. தனி நாட்டு கோரிக்கையை இலக்காக கொண்டு செயற்பட்ட இந்த அமைப்புகளிற்கு முன்னோடியான தாய் அமைப்பு என இதனை வர்ணிக்கலாம்.


1965 மார்ச்சில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 66 தொகுதிகளில் ஐக்கிய தேசியக்கட்சியும் 44இடங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் வெற்றி பெற்றிருந்தன. எனினும் அரசாங்கத்தை அமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மை அவ்விருகட்சிகளிற்கும் கிடைக்காதிருந்தது. இதனால் மூன்றாவது பெரும்பான்மையாக வெற்றிபெற்றிருந்த தமிழரசுக்கட்சியினரின் தயவை நாடினர். 14 தொகுதிகளில் வெற்றிபெற்றிருந்த தமிழரசுக்கட்சியினர் மந்திரிப்பதவி ஒன்றினைப் பெற்றுக்கொண்டு அதற்கு மாற்றீடாக ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து ஆட்சியில் பங்கெடுத்தனர். இவ்வாறு கிடைத்த மந்திரிப்பதவியை மக்களால் தெரிவுசெய்யப்படாத மு.திருச்செல்வம் பெற்றுக்கொண்டு உள்ளூராட்சி அமைச்சரானார். அத்துடன் எதிர்க்கட்சிகளின் ஆசனத்தில் அமரவேண்டிய தமிழரசுக்கட்சியினர் ஆளும்கட்சியாகி ஆரவாரத்துடன் எங்கும் பவனிவந்தனர். இவ்வாறு இவர்கள் அரசுடன் இணைந்து ஆட்சி நடத்தியகாலத்தில் தமிழ் ஈழ மக்களை பாதிக்கும் பலசம்பவங்கள் நடந்தேறின.

**சம்பவங்கள் தொடரும்.....**

(நன்றி- சமகளம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வட-கிழக்கில் மனித உரிமை நெருக்கடிகள்



டாக்டர் பிரையன் செனிவரத்ன
(Dr. Brian Seneviratne)
தமிழாக்கம் வே.ஜெ. போஸ்

எனது உரைக்குச் சம்பந்தமான 4 நூல்கள் பின்வருமாறு.


1. Delayed or Denied? Sri Lanka's Failing Transitional Justice Process by PEARL (People for equality and relief in Lanka- A Tamil advocacy group in Washington D.C. USA)
2. Normalising the Abnormal. The militarization of Mullaitivu by PEARL and ACPR ( Adayaalam Centre for Policy Research- a similar group in Jaffna, Sri lanka)
3. My two books on Sri Lanka

Sri lanka: Sexual Violence of the tamils by the Armed Forces 2nd Edition April 2017

Struggle for justice of the Tamil people of Sri Lanka 2nd Edition November2020

The PEARL publication.

2017 பிற்பகுதியிலும் 2018 முற்பகுதியிலும் நிலைமாறுகால நீதி விடையத்தில் இலங்கை அரச அதிகாரிகளால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட 170க்கும் மேலான அறிக்கைகளை பேர்ல் அமைப்பு ஆராய்வு செய்துள்ளது. ஜுலை 2017 இலும் பிப்ரவரி 2018 இலும் வேறு எந்த அனைத்துலக ஆய்வு நிறுவனங்களும் செய்யாத ஆராய்வுகளைப் பேர்ல் செய்துள்ளது. இலங்கையின் வட -கிழக்கிற்கு(உள்ள 8 மாவட்டங்களில் 7க்கு ) ஆராய்வு அலுவலர்களை நேரடியாக அனுப்பி, தங்கவைத்து,நிலைமாறு நீதிபற்றி போரினால் பாதிக்கப்பட்ட 50 தனிநபர்களை நேர்காணல் செய்துள்ளனர். இதன் விளைவு,கட்டாயமாக எல்லோரும் வாசிக்கவேண்டிய அறிக்கையொன்று. இது இணையத்தில் உள்ளது.




### இலங்கையின் வட -கிழக்கில் உள்ள ஒரு இராணுவ/ பொலிஸ் அரசு. மக்களாட்சிக்கான அத்தியாவசிய தேவை.

இலங்கையின் வட -கிழக்குப் பகுதி இலங்கை அரசின் ஆளுமைக்குள் அன்றி இலங்கை இராணுவ (99%சிங்களவர்) பொலிஸ் (95% சிங்களவர்)ஆட்சிக்குள் உள்ளது. அது ஒரு இராணுவ / முரணான ஒன்றாகவும் கருதலாம். இலங்கைக்கு வெளியே உள்ள அரசியல் யாப்பு நிபுணர்களால் கேள்விக்குட்படுத்தப்படவேண்டியதொன்று.

இலங்கை அரசினால் ஒரு சிறிய திருத்தத்தினால் செய்யப்படக்கூடிய ஒரு நிலைதான் இது.இதைச் செய்வதற்குரிய அழுத்தம் இலங்கைக்கு வெளியில் இருந்துதான் வரவேண்டும்.இலங்கைக்கு வெளியேயுள்ள, வட -கிழக்கில் நடக்கின்ற விடையங்களில் அக்கறையுள்ளவர்கள் இந்த அழுத்தத்தை ஏற்படுத்தவேண்டும்.

(204,000),இஸ்ரேல் (170,000), சவூதி அரேபியா (227,000),ஐக்கிய இராச்சியம் (146,000) ஆகிய நாடுகளை விட அதிகமானதாகும்.

வட - கிழக்கில் இராணுவத்துக்கும் மக்களுக்குமான விகிதாசாரம் 1:5, வவுனியாவில் 1:3.

PEARL, ACPR ஆகிய நிறுவனங்களால் 'அசாதாரணத்தை சாதாரணமாக்கல். இலங்கைத் தீவில் இராணுவ மயமாக்கல்' ('Normalising the Abnormal. Militarisation of Mullaitivu') என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்றின்படி முல்லைத்தீவில் இராணுவ-மக்கள் விகிதாசாரம் 1:2 ஆகும்.இந்தளவுக்கு உலகின் எந்தப்பாக்கத்திலும் ஒரு இடம் இருக்க முடியாது.



"விடுதலைப்புலிகள் ஒடுக்கப்பட்டுவிட்டார்கள். அந்த நிலையில், பாரிய இராணுவப்பிரசன்னம் நியாயமா என்ற கேள்வி எழுகிறது."

பொலிஸ் ஆட்சி.அங்கு இராணுவமும் பொலிஸும் தாம் விரும்பிய எதையும் எந்த வித பொறுப்புக்கூறலுமின்றி செய்து கொள்ளலாம்.

கடந்த 10 வருடங்களாக இருந்துவரும் இந்த நிலைமை இலங்கை அரசின்மீது அனைத்துலக அழுத்தம் இல்லையென்றால் இன்னும் பல ஆண்டுகளுக்கு இப்படியே நீடிக்கலாம். அந்த அழுத்தம் இலங்கைக்கு வெளியே வசிப்பவர்களால் மட்டுமே பிரயோகிக்க முடியும்.தீவின் ஒரு பகுதியில் மட்டும் இராணுவ / பொலீஸ் ஆட்சியை அமைப்பதற்கு இலங்கை அரசியல் சட்டத்தில் எந்த விதியும் இல்லாதபோது,இது அரசியல் யாப்பிற்கு இது மிக அவசரமானதும்,காலதாமதமின்றி செய்யவேண்டியதுமாகும்.

### வட - கிழக்கு தமிழ் பகுதிகளிலுள்ள இராணுவத்தின் அளவு .

இலங்கையில் வட -கிழக்கில் பெருந்தொகையான இராணுவ பிரசன்னம் உள்ளது.இந்தப் பகுதியைத் தவிர்ந்த உலகின் எந்தப் பாகத்திலும் இந்தளவு இராணுவ மயமாக்கல் காணமுடியாது. (இராணுவ சமநிலை) என்ற 'தந்திரோபாயத்திற்கான கற்கைகளுக்கான அனைத்துலக நிறுவனத்தின் கருத்திற்கிணங்க,இலங்கை இராணுவத்தில் 255,000 இராணுவ வீரர்கள் உள்ளனர்.இது பிரான்ஸ்

தமிழ் மக்கள் வாழும் அந்தப் பிரதேசங்களில் நடைபெறும் பாலியல்,மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு இராணுவமும் பொலிஸுமே பொறுப்பாக உள்ளனர்.

மனிதாபிமானக் காரணங்களுக்காக அனைத்துலகத் தலையீடு கட்டாயமானதாகும். எதுவும் செய்யாதுவிட்டால் அந்தப் பகுதியில் உள்ள தமிழர்கள்,வாழ்வாதாரத்துக்கு எந்த வழியும் இல்லாது மிகச் சாதாரணமாக அழிந்தொழிந்து போகலாம்.விவசாயம் செய்ய நிலம் இல்லை,மீன் பிடிக்க கூட அனுமதி இல்லை,வேலைவாய்ப்பு இல்லை,சிறுவியாபாரம் கூட செய்ய வசதி இல்லை. ஏனெனில் இவையாவும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

### தமிழர்கள் இல்லாதொழிந்தால் , அது இனவழிப்புத்தான்.

விடுதலைப்புலிகள் ஒடுக்கப்பட்டுவிட்டார்கள். அந்த நிலையில்,பாரிய இராணுவப்பிரசன்னம் நியாயமா என்ற கேள்வி எழுகிறது. யார் எதிரி?இதற்கான எந்த நியாயமும் இல்லாத காரணத்தினால்,இராணுவம் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும். உள்ளூர் தமிழர்களிடமிருந்து பொலீஸ்படை உருவாக்கப்படவேண்டும். இது மிக அவசரமானதும்,சாத்தியமாக்கப்படவேண்டியதுமாகும்.வெளிநாடுகள் தலையீடின்றி இது நடைபெறக்கூடிய ஒன்றல்ல.

*(மேலும் இராணுவத்தினரின் சிவில் ஈடுபாடுகளுடன்..... தொடரும் )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரதகுமாருடன் நாங்கள்!

## எனக்குப் பிடித்த வரதகுமார்

**– வே.ஜெ .போஸ்**

“காலஞ்சென்ற வரதகுமார்” என்று நாம் சொல்லத் தொடங்கி இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால் இன்னும் எமது உள்ளங்களில் இருந்து இன்னும் அவர் மறைந்துவிடவில்லை .மறக்கமுடியாத ஒரு மாமனிதராகிவிட்ட வரதர் அவர்கள் ஒரு தனித்துவமான மனிதர்.

சென்ற 13ந் திகதி அவருடைய இரண்டாவது வருட நினைவு நாள் தமிழ் தகவல் நடுவம்,சமூக அபிவிருத்தி நடுவம்,மற்றும் தமிழ் அருங்காட்சியகம் இலண்டன் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்றபோது இலண்டன், பிரான்ஸ்,அவுஸ்திரேலியாவிலிருந்து பலரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.அவரது சிறுபி



ராயம்,இளமைக்காலம்,அரசியல்,மனித உரிமை செயற்பாட்டாளராக இருந்த காலம் பற்றி பலரும் உரையாற்றினார்கள்.சிலம்பம்,கராட்டி பயின்றுள்ளார் என்பது எமக்குப் புதிய செய்தியாக இருந்தது. கிங்ஸ்டன் மாநகர முதல்வர், இங்கிலாந்தின் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் திரு.ஜெருமி கோபன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இதில் உரையாற்றிய அவருடன் இணைந்து செயற்பட்ட திரு.இரவீந்திரன் (அவுஸ்திரேலியா) அவர்கள் வரதரை ‘சுவாமி விவேகானந்தருக்கு’ஒப்பிட்டு பேசியது குறிப்பிடத்தக்கது. குடும்பவாழ்க்கை,சொந்தவாழ்க்கை இரண்டையும் எமது மக்களின் உரிமைப் போராட்டத்துக்கான செயற்பாடுகளுக்காகத் தியாகம் செய்த இந்த மனிதரை எனக்குப் பிடித்தவராகக் கண்டுகொண்ட காரணங்களை விளக்குவதே இந்தக் கட்டுரை.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவருடன் பழகுவதற்கும், சேர்ந்து செயற்படுவதற்குமான வாய்ப்பு எனக்கு இருந்தது. பலநாடுகளிலுமுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ,அரசியல் பிரமுகர்கள் என்று பலரோடும் அவரது தொடர்புகள் இருந்தன. கல்வியில் மேம்பட்ட குடும்பத்தில் பிறந்தவர்.ஆனால் எதையும் வெளிக்காட்டாது மிக எளிமையான மனிதராக எல்லோருடனும் பழகுவார். இது சமூகசெயற்பாட்டாளர்களுக்கு இருக்கவேண்டிய ஒரு பண்பு.

தாயகத்தில் ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து, வெவ்வேறு குழுக்களை வழிநடத்திய தலைவர்களோடு மிக நெருக்கமான உறவு அவருக்கு இருந்தது. முரண்பட்ட குழுத்தலைவர்களுடன் சமமாக பழகுவார். அவர்களும் ‘சொல்லுங்கோ அண்ணை ‘ என்று மரியாதையோடும், வாஞ்சையோடும் பழகுவார்கள். அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டவும் ,கண்டிக்கவும் இவர் தவறுவதில்லை. தயங்குவதுமில்லை.இந்தப் பண்பு யாரிடமும் காணமுடியாத ஒன்று.

## வரதகுமார் எனும் மனிதம்......

நெஞ்சங்கள் பலவற்றில் நீங்காத இடம் பிடித்த வரதர் என அழைக்கப்பட்ட வரதகுமார் சுமை தாங்க முடியாமல் சிவபதம் அடைந்திட்டார் தன் கனவு நிறைவேற மனமுவந்து கைகொடுக்க பலர் இல்லை என்றறிந்து சுயநலம் பாராது இரவு பகலாக உழைத்து தன் உடம்பை பேணாத தமிழர் தலைவனாய் தனியாகவே போய்விட்டார்.

அன்பு பாசம் நிறைந்த இவர் தாய்ப் பாசத்தால் தாயகம் சென்றங்கே தாயை வழியனுப்பி தன் கடமை செய்து வந்து சில மாதம் ஓட முதல் சென்றுவிட்டார் அன்னை சேர
தலைமறைவாய் தானிருந்து தமிழர் வாழ் சிறப்படைய முதியோர் ஒன்றுகூடல் முதல் விதவை தொழில் திட்டமென இலங்கை வரை சென்றமைத்து செயற்பட வைத்த பெருமை வரதருக்கே சேரும்

போட்டி பொறாமை பெருமை பேதங்கள் ஏதுமின்றி தன் குறிக்கோள் ஒன்றுக்கு மட்டும் கவனம் செலுத்தி பெருந்தொண்டு செய்திட்ட வரதகுமார் பாதை தெரியாமல் பரிதவிக்க விட்டு விட்டு இறைவனடி சேர்ந்திட்டார்

நாமெல்லாம் சேர்ந்து அவர் புகழ் பேச..... வழி கொடுக்காவிட்டாலும் மீட்சி பத்திரிகை அவர் புகழ் பேச சில பக்கங்கள் தந்ததற்கு நன்றிகள் பல.



**- விஜி சச்சிதானந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அனைத்தும் ஆரவாரமின்றி அமைதியாக முன்னெடுப்பார். ஆரம்பிக்கும்போதே ஆரவாரம் செய்வதுதான் அநேகமான தமிழரின் பண்பாடு. அவை நிறைவேறும்வரை கடினமாக உழைப்பார்.அகதிகள் விடயமாக பிரித்தானிய அரசு தனது சட்டங்களை ரத்து செய்த ஒரு விடயம் தமிழ் தகவல் நடுவத்தினூடாக அவரது கடின உழைப்பின் சாதனை என்று கூறலாம். இப்படிப் பல உதாரணங்கள். இது எடுத்த காரியத்தில் அவரின் ஆழமான ஈடுபாட்டையும், சுய விளம்பரம் தேடாத பண்பையும் எடுத்துக்காட்டுகிறது.

தாயகத்தில், போராட்ட காலத்தில் பிரித்தானியாவிலுள்ள தனியார் கூலிப்படை (கினி மினி) ஒன்று இலங்கை இராணுவத்துக்கு விசேட பயிற்சி அளிப்பதிலும்,பல அவலங்களை ஏற்படுத்துவதிலும் தொடர்பு பட்டிருந்ததை வெளிக்கொணர்வதில் வரதரின் பங்கு மிகப் பெரியது. தாயகத்திற்கு நேரடியாகச் சென்று பல தரவுகளைப் பெற்று ,இன்று பிரித்தானிய மெட்ரோபொலிட்டன் அதை விசாரிக்குமளவிற்கு அவரது உழைப்பு இருந்துள்ளது. அவரது இறப்புக்குப்பின்தான் அந்த விசாரணை விபரங்களும்,பின்னணியில் இவரது உழைப்பும் இருந்தது தெரியவந்தது. இது அவரின் ஆத்மார்த்தமான ஈடுபாட்டைக் காட்டும் பண்பு.

போலித் தொண்டர்களுக்குப் பொன்னாடை போர்த்துவதும், விளம்பரப்படுத்துவதும் எம்மிடையே நடக்கும் சாதாரண நிகழ்வுகள். தமிழ் தகவல் நடுவத்தின் பேரால் முன்னெடுக்கப்படும் நிகழ்வுகள் யாவும் இவரது சிந்தனையில் உதித்த வடிவங்களே. எந்த நிகழ்விலும் அவர் மேடையில் தோன்றியதில்லை. மக்களோடு மக்களாக நிற்பார்.முன்னணியில் நிற்பவர்களை இயக்கிக்கொண்டு இருப்பார்.வரதரின் தன்னடக்கம், தற்பெருமையின்மை போன்ற பண்புகளின் எடுத்துக்காட்டாக இவை விளங்குகின்றன.

ஒரு சுவையான சம்பவம். ஊடகமொன்றின் ஆண்டுவிழா நிகழ்வில் தமிழ்நாட்டு அரசியல்வாதி ஒருவர் சிறப்பு விருந்தினர். ஒரு மணித்தியாலமாகச் சிறப்பு சொற்பொழிவு. உணர்ச்சிகரமான பேச்சு. அடிக்கடி விசிலடியும் கரகோசமும். எனது அருகில் வரதர் அமைதியாக உட்க்கார்ந்திருந்தார். பேச்சு முடிந்தது.பலத்த கரகோஷம். வரதர் என்னைப்பார்த்து,'போஸ், இதுவரை இவர் பேசியதன் சாரத்தைக் கூறுவீரா ?'எனக் கேட்டார்.எதையும் கூறமுடியாமல் தடுமாறினேன்.வெறும் உணர்ச்சிப் பேச்சு.உருப்படியான விடயங்கள் எதுவும் அதிலில்லை.

எதையும் உணர்வுபூர்மாக அணுகாமல்,ஆழமாகப் பார்க்கும் பண்பை அன்று வரதரிடம் கண்டு வியந்தேன்.

பல்கலைக் கழக மாணவர்கள் தமது ஆய்வுக்காக, போராட்ட வரலாறுபற்றி ஆய்வுக்கட்டுரை எழுதுவோர், பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தமது தரவுகளுக்காக, இன்னும் தனிநபர்கள் தமது வழக்குகளுக்கான ஆவணங்களுக்காக, இப்படியாக அனைத்துக்கும் நாடுவது தமிழ் தகவல் நடுவத்தில் எப்போதும் தொடர்புகொள்ளக்கூடியதாக இருக்கும் ஒருவரான வரதரைத்தான். ஆவணங்கள் சேகரிப்பதில், பாதுகாப்பதில், அதை மற்றவர்களுக்கு உதவுவதிலும் அவர் காட்டிய இன விடுதலை மீதான ஆழமான அக்கறையும், ஆத்மார்த்தமான உள்ளுணர்வும் பலரிடம் காணமுடியாத ஒரு பண்பு.

2009ல் போர் முடிந்துவிட்டது. தமிழினம் நிர்கதியாகி நின்றது. கூறுபட்டு நின்ற தமிழினத்தை ஒன்றிணைத்து மீண்டும் தலைநிமிர வைக்க அவர் எடுத்த முயற்சிகள் பலவாகும்.புலம்பெயர் நாடுகளில் இருந்த பல்வேறு இயக்க சார்பானவர்களையும் ஒருங்கிணைக்கும் நிகழ்வுகளில், அவர்களை மனந்திறந்து கருத்துக்களை பரிமாற வைப்பார். தாயகத்தில் இருந்த சகல அரசியல் தலைவர்களையும் சுவிஸ் நாட்டுக்கு வரவழைத்து ஒரே மேசையில் அமர்ந்து கலந்துரையாடவைத்து ஒற்றுமையை ஏற்படுத்த வரதர் எடுத்த முயற்சி வேறு எவராலும் எடுக்க முடியாத ஒன்று.மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு நிர்வாகப்பயிற்சி அளித்தல், தாயகத்தில் உள்ள தமிழ் சட்டத்தரணிகள் குழுவொன்றுக்கு மனித உரிமை செயற்பாடுகளில் பயிற்சி பட்டறைகள் - இப்படியாக அவரின் தூர நோக்குச் செயற்பாடுகள் எண்ணிலடங்காது. விடுதலைப் புலிகளின் பொலிஸ் பிரிவுக்கான பயிற்சியை ஒழுங்கமைப்பதில் வரதரின் பங்கு பலரும் அறியாத ஒன்று. இன விடுதலையிலும், இனத்தின் எதிர்கால வளர்ச்சியிலும் அக்கறையுள்ள ஒருவருக்குத்தான் இந்த ஆளுமைமிக்க பண்புகள் இருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

"கனவு காணுங்கள்"என்பது அப்துல் கலாம் அவர்களின் கூற்று. வரதரும் கனவுகள் கண்டார். இலங்கைத் தமிழர் பாரம்பரியம், வரலாறு, முள்ளிவாய்க்கால் அவலங்கள் இவற்றையெல்லாம் இளையதலைமுறைக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்பது அவர் கனவு. அதற்கென ஒரு நிரந்தர அருங்காட்சியகம் அவசியம் என்பது அவரது இறுதிகாலக் கனவு. தமிழ் தகவல் நடுவத்தில் இலங்கைத் தமிழர் பாரம்பரியம் பற்றிய வகுப்புகளை டாக்டர் சிவா தியாகராசா மூலம் ஒழுங்கு செய்து நடாத்தினார்.அடுத்து, முதற்கட்டமாக முள்ளிவாய்க்கால் இறுதிநாளான மே 18ல், 2019ல் ஒரு கண்காட்சியை நடாத்த ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார்.தீவிரமாக உழைத்தார்.இளையதலைமுறையினர் பலரை உள்வாங்கி, அவர்களை ஈடுபடவைத்துத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.கடின உழைப்பும்,வேலைப்பளுவும் அவர் உடலைத் தாக்கியதில் அவரை எம்மிடமிருந்து பிரித்து இறைவன் தனதாக்கிக் கொண்டான்.

அவர் கண்ட கனவான கண்காட்சி அவரின்றி, அவர் எண்ணியபடியே இளைய தலைமுறையினரும் இணைந்து மிகச்சிறப்பாக, வெற்றிகரமாக நடாத்திமுடித்தனர். அவரின் அடித்தளத்தில் உருவாக்கப்பட்ட இக் கண்காட்சி பலரின் பாராட்டுதல்களையும் பெற்றது.கண்காட்சியில் முள்ளிவாய்க்கால் பகுதியைப் பார்வையிட்ட திரு ஜெருமி கோபினின் கண்கள் கலங்கியத்தைப் பலரும் அவதானித்தனர்.

அவரின் அடுத்த கனவாகிய 'தமிழ் அருங்காட்சியகம் இலண்டன் 'உருவாக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் பணிகள் பின்னடைந்திருந்தாலும், அதை நிறைவேற்றத் தீவிரமாக, தமிழ் தகவல் நடுவத்தின் இன்னொரு குழு இயங்கி வருகிறது.

தமிழ் தகவல் நடுவமும் அதனூடாக உருவாகும் தமிழ் அருங்காட்சியகம் இலண்டனும்,ஏன் இலங்கைத் தமிழினம் உள்ளவரை வரதகுமார் அவர்களின் நினைவுகள் வாழும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

வரதரில் எனக்குப் பிடித்த பலவற்றுள் சிலவற்றை மட்டும் கூறியுள்ளேன்.அந்த மாமனிதரைப் பற்றிக் கூற இன்னும் பலவுண்டு. இருந்தாலும் இத்தோடு நிறுத்திக்கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வரதரும் நானும்

## - சிவா தியாகராஜா

எனது கண்களை மூடுகிறேன். சிரித்த முகத்துடனும் சிந்திய வரவேற்புடனும் வாங்கோ டொக்டர் என நண்பர் வரதர் வரவேற்கிறார். கண்களைத் திறக்கிறேன். அவர் இன்று நம்மிடையே இல்லை என்ற யதார்த்தம் உணர்வுகளை உலுக்கிவிட்ட போதிலும், நாம் அன்றாடம் மேற்கொள்ளும் பணிகளிளெல்லாம் எவற்றை எப்படிச் செய்யவேண்டும் என்ற அவரது அன்புக் கட்டளை காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

2003 ம் ஆண்டு முதுவேனிற் பருவத்தில் ஒருநாள். எனது நண்பன் விசாகன் திரு. வரதகுமாரை எனது வீட்டிற்கு அழைத்து வந்திருந்தான். ஈஸ்ற்ஹாமில் இயங்கி வந்துகொண்டிருக்கும் தமிழர் தகவல் நடுவத்தின் செயலகத்தை கிங்ஸ்ரனுக்கு மாற்றிக்கொண்டு வருவதற்கான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். சில மாதங்களில் தனது இருப்பிடத்தையும் கிங்ஸ்ரனுக்கு சமீபமாக மாற்றிக்கொண்டார். அதன் பின்னர் வார இறுதிகளில் தமிழர் விழாக்களோ, நூல் வெளியீடுகளோ நடைபெறும் இடங்களுக்கெல்லாம் அவர்கள் போகும் போது என்னையும் அழைத்துச் செல்வார்கள். நாளடைவில் எங்களுக்கிடையே இருந்த பரிச்சயம் அதிகமான பின்னர் அவரை வரதர் என்றே அழைத்து வந்தேன்.

நாங்கள் காரில் செல்லும் நேரங்களில் தனது மனதிலிருக்கும் ஆசைகளை - திட்டங்களை - சொல்லுவார். அக் காலகட்டத்தில் வரதகுமாரின் மனத்தில் தோன்றிய இரு திட்டங்கள் (1) எமது பாரம்பரியத்தைப் பேணும் முகமாக இலண்டனில் ஒரு அரும்பொருளகம் (Tamil Museum) அமைப்பது. (2). பிரித்தானியாவில் ஒரு இலங்கைத் தமிழர் மாதிரிக்கிராமம் (a model Lankan Tamil Village in a remote site)

- துலா வைத்த கிணறுடன் கூடிய இலங்கைத் தமிழர் கிராமத்தை அமைப்பது - நமது வருங்காலச் சந்ததியருக்கு நமது பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதற்காக.

1980 ம் ஆண்டில் பிரித்தானியாவை வந்தடைந்த நாளிலிருந்தே இலங்கையிலிருந்து இங்கே தஞ்சம் கோரி வந்த அகதிகளினதும், பணவசதியற்றவர்களினதும் நலனுக்காக உழைத்து வந்தவர் வரதகுமார். அகதிகளின் நலனில் அக்கறை கொண்ட வண.பிதா பத்திநாதர், க. கந்தசாமி, மற்றும் சில நண்பர்களை இணைத்து 1981 ம் ஆண்டில் தோண்ரன் ஹீத்தில் (Thornton Heath) தமிழர் தகவல் நடுவம் (Tamil Information Centre) என்ற நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த மக்களின் நலனுக்காக எவரையும் தரக்குறைவாக



மதிக்காது, சுயாதீன சமதர்ம நோக்குடன் இயங்கும் சங்கமாக இது பிரகடனப்படுத்தப் பட்டது. 1984 ம் ஆண்டு வடக்கு கிளாப்பாமுக்கு (North Clapham) இடம் பெயர்ந்த இந்த நிறுவனத்தின் இலண்டன் செயலகம் 1987ல் மூடப்பட்டு, அதன் கிளைகள் 1987 இல் இருந்து 1991 வரை சென்னையிலும், மதுரையிலும் இயங்கி வந்தன.

1987ம் ஆண்டிலிருந்து அடுத்த பத்து ஆண்டுகளுக்கு வரதகுமார் தமிழ் அகதிகள் இயக்கக் குழு (Tamil Refugee Action Group) என்ற நிறுவனத்தின் இணைப்பாளராகப் பணியாற்றினார். அக் காலகட்டத்தில் அவர் ஏறாத மேல்கோட்டுப் படிகளோ, பார்க்காத சட்ட நிபுணர்களோ கிடையாது என்பார்கள். அவரால் பயனடைந்து, பிரஜாஉரிமை பெற்று, மேனிலை அடைந்த பலர் பின்னால் அவரைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை என்பது வேதனை தரும் விடையம்.

1991 ம் ஆண்டில், தென்னிந்தியாவில்



தமிழர் தகவல் நடுவத்தின் கிளைகளை இயக்கி வந்த அவரது சகாக்கள் காலமானபின், ஈஸ்ட் ஹாமில் (East Ham) தமிழர் தகவல் நிலையத்தின் இலண்டன் செயலகம் நிறுவப்பட்டது.

அதற்கு தமிழர் இல்லம் என்கிற அழகான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயரும் சூட்டப்பட்டது. இலங்கைத் தமிழ் அகதிகளின் புனர் வாழ்க்கையைச் சீரமைப்பதே அதன் முக்கிய பணியாக இந் நிறுவனம் செயல்பட்டது.

2004 ம் ஆண்டில் தமிழர் தகவல் நடுவத்தின் செயலகத்தை வரதகுமார் கிங்ஸ்ரனுக்கு மாற்றிக்கொண்டார். அடுத்த ஆண்டில் அதன் புனரமைப்பு வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டார். தமிழர் தகவல் நிலையம் முக்கியமாக இலங்கையில் மனித உரிமைப் போராட்டங்களுக்காக ஈடுபடும் அதே வேளை, பிரித்தானியா வாழ் தமிழ் மக்களின் நலன் காப்பதற்கென சமூக அபிவிருத்தி நடுவம் (Centre for Community Development) என்ற நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கியமான ஒரு அங்கமாக முதியோர் வலுவூட்டல் திட்டம் 2006 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, இன்று 125 நிரந்தர அங்கத்தினர்களுடன் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் தகவல் நடுவத்தின் ஒரு பிரிவாக வரலாற்றுப் பாரம்பரிய அங்கமாக (History and Heritage Unit) ஆரம்பிக்கப்பட்டது. அதை நிர்வகிக்கும் பொறுப்பை என்னிடமே விட்டிருந்தார். அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டிலும் கோடை காலங்களில் மாதம் ஒரு வரலாற்றுப் பாடத்தில் விரிவுரைகள் நடத்தப்பட்டன.

தனிப்பட்ட முறையில் கடந்த பத்து ஆண்டுகள் வரதகுமார் எனது புத்தக வெளியீட்டு விழாக்களுக்காக வழங்கிய உதவிகள் வாழ்நாளில் மறக்கமுடியாதவை. 2011ம் ஆண்டில் எனது மருத்துவக் களஞ்சியம் நூல் வெளியிடுவதற்காக டூட்டிங் கிலிருந்த சிவயோகம் மண்டபத்தை ஒழுங்கு செய்து தந்து, அப் புத்தங்களையும் தனது வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்து தந்திருந்தார். அடுத்த ஆண்டு 2012ல் Peoples and Cultures of Early Sri Lanka என்ற எனது நூலை SOAS பல்கலைக் கழகத்தில் வெளியிட்டு வைத்தார். 2016ல் மனோர் பார்க் ஹாலில் எனது புனித யாத்திரை என்ற நூலை வெளியிட உதவினார். 2018ம் ஆண்டில் Kantarodai Civilization of Ancient Jaffna என்ற நூலை வெளியிட்டு வைத்து, கூட்டத்தில் சிறப்புரை ஆற்ற பேராசிரியர் Peter Schalk ஐ ஒழுங்கு செய்து தந்திருந்தார்.

இவ்வாறு பலருக்கு பலவகையான உதவிகளை அவர் செய்து வந்திருப்பதை அறிவேன். திரு. வரதகுமார் மேற்கொண்ட அகதிகள் நல முயற்சிகளாலும், மனித உரிமைப் போராட்டங்களாலும், தீர்க்கதரிசனமான திட்டங்களாலும், அன்று பலன் பெற்றோர் பலர் இன்று பயன் பெறுவோர் பலர்.

அவரது கல்வித் தகைமைக்கும், பரந்த உலக அறிவுக்கும், நிர்வாகத் திறமைக்கும், அமைப்புமுறை ஆற்றலுக்கும், எழுத்து வன்மைக்கும், எந்த சிக்கலான பிரச்சினைகளையும் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து இலகுவாக அறிமுகப்படுத்தும் ஆற்றலுக்கும், பொதுசனத் தொடர்பு ஆளுமைக்கும் - ஏதாவதொரு பிம்மாண்டமான கார்ப்பரேஷன் நிறுவனத்தில், நிர்வாகப் பதவியில், நிறையச் சம்பளம் வாங்கிக்கொண்டு சொகுசான வாழ்க்கை வாழவேண்டிய இந்த மனிதன் - இங்கே இப்படி அடிப்படைவாழ்க்கை வாழ்ந்து கொண்டு அவதிப்படுகிறாரே என நான் எண்ணியதுண்டு. ஆனால் அவரோ- மக்களோடு மக்களாக வாழ்ந்து, அவர்களுக்குச் சேவை செய்வதையே தனது வாழ்வின் - பிறவியின் - நோக்கமாகக் கொண்டார்.

தனக்கென வாழாமல்- தனது உண்டியை மறந்து, உடலை மறந்து, சுகத்தை மறந்து, சொகுசை மறந்து, தனது நேரத்தையும், காலத்தையும் மற்றவர்களின் நலனுக்காக அர்ப்பணித்து - நமது மத்தியில் சாதாரண வாழ்க்கை வாழ்ந்து காட்டிய ஒரு மாமனிதர் எங்கள் வரதர்.

அவர் ஆரம்பித்து, விட்டுச்சென்ற பணிகளை கைவிடாது மேலெடுத்துச் செல்வதே அவருக்கு நாம் செய்ய வேண்டிய அன்புடமை ஆகும்! ஆராதனை ஆகும்! அஞ்சலி ஆகும்! ■

## அன்புக்கு மரணம் இல்லை

சீரிய நெற்றி எங்கே?
சிவந்த நின் இதழ்கள் எங்கே?
கூரிய விழிகள் எங்கே?
குறுநகை போனதெங்கே?
நேரிய பார்வை எங்கே?
நிமிர்ந்த நின் நடைதான் எங்கே?

நிலமெல்லாம் போற்றும் தோற்றம்
நிழலாக மறைந்ததிங்கே
வரதரா மறைந்தார் இல்லை
வாய்மைக்கு மரணம் இல்லை
அழிவுமில்லை முடிவுமில்லை
அன்புக்கு மரணம் இல்லை.

- சிவா தியாகராஜா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாஞ்சலி! வரதகுமாரின் வழிநடத்தல்

## EEP Programmes and Its Contribution To Motherland


எங்களது *EEP* வரலாற்றில், செயற் குழுவின் 2வது தலைவராக 2010ல் இருந்து இரண்டரை ஆண்டுகள் தலைவராகவும் பின்னர் இன்றுவரை காரியதரிசியாகவும் இருக்கிறேன். இந்தக்கால கட்டத்தில் தான் திரு வரதகுமாரின் பரிச்சயம் எனக்கு ஏற்பட்டு கூடவே வேலை செய்யும் வாய்ப்பும் கிட்டியது. அவருடைய நிர்வாகத்திறமை, பற்றி அப்போதுதான் எனக்குத் தெரிய வந்தது. அதுமட்டுமல்ல, அவர் ஒரு *visionary* யும் கூட. *Visionary* என்ற சொல்லுக்கு கருத்து பார்த்த போது, *A visionary's ideas may either work brilliantly or fail miserably* என்று இருந்தது. திரு வரதகுமாரைப் பொறுத்தவரை, *CCD* யின் *EEP project*, *brilliant* ஆகவே வேலை செய்து வருகிறது. *EEP* ஒன்றுகூடலுக்கு 15, 20 பேர் மட்டும் வருகை தந்த காலம் போய், 80 பேர் வருகை தந்து இப்போது *zoom* ஒன்றுகூடலில் 200 ஐத் தாண்டி விட்டது. வருகை தருபவர்கள் உள்ளூர் வாசிகள் மட்டுமல்ல, உலகத் தமிழரும் கூடத்தான். பார்த்துப் பெருமிதம் கொள்ளத்தான் அவர் எம்மோடு இல்லை.




எனக்கு இப்போதும் நினைவுக்கு வருவது, எங்கள் முதலாவது *committee meeting* ல், அவர் சொன்னது: இப்படியான தமிழ்ச் சங்கங்களுக்கு தம் பெற்றவர்களை அனுப்புவதற்குப் பிள்ளைகளுக்கு விருப்பமில்லை. ஏனென்றால் அங்கு வம்பு பேசுவது அதிகம். பெற்றவர்களை அங்கு வீணாக அனுப்பி வம்பை விலைக்கு வாங்கலாகாது என்ற பரவலான அபிப்பிராயம் உள்ளது. அதை நீங்கள் உடைக்க வேணும் என்று கூறினார். அதன் விளைவாகத்தான் நாங்கள் *monthly calendar* தயாரித்து *weekly agenda* போட்டு *back to back programmes* வைத்தோம். அது நன்றாகவும் வேலை செய்யத்தொடங்கியது.

அவரது அடுத்த வழிநடத்தல், நாம் எங்கள் இனத்தவரோடேயே ஆட்டமும், பாட்டும், பேச்சுமாகத் தனித்தீவுகளாக இயங்கி வருகிறோம். அப்படியல்லாது *Kingston Borough* வில் உள்ள மற்றைய சமூகத்தினருடனும் தொடர்பு கொள்ள வேணும், *Kingston Council* க்கு நாம் இந்த *Borough* வின் மற்றைய இனத்தவருடன் சேர்ந்து வேலை செய்பவர்கள், மற்றும் *Council initiative* களில் பங்குபற்றி எங்களுக்கு என ஒரு அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தார்.

இந்த உந்துதலை அவர் தந்ததால்தான் நாங்கள் *council* நடத்தும் *Community Fun*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலா சிவகுமாரன்

*Day, Kingston Carnival, London Libraries City Read, St Peters Church cooking for homeless* என்ற பல விஷயங்களில் முண்டியடித்துப்போய் முனைப்பாக செயலாற்றினோம். அதன் பலனாக 2013ல் *Royal Borough of Kingston's Annual Health Report*ல் எங்கள் சங்கம் *case study* யாகத் தெரிவு செய்யப்படிருந்தது.

அடுத்ததாக அவர் ஊக்குவித்தது கலைமாலையை. முதிய தலைமுறையை இளைய தலைமுறை மதிக்கவேணும், அவர்களது பங்களிப்பை இளையதலைமுறையும், இந்த சமுதாயமும் உணர்ந்து பெருமைப்படவேணும். அத்தோடு முதிய தலைமுறையினரின் தூங்கிக் கிடந்த திறமைகளை வெளிக்கொண்டுவரவும், ஆசைகள் அரங்கேறவும் இந்தக் கலைமாலை மேடை அமைத்துக் கொடுத்தது. வரதர் இந்த முற்போக்குச் சிந்தனைகளை அமுல் படுத்துவதில் எங்களுக்கு உந்துதல் தந்தது மட்டுமல்ல தானும் நேரில் வந்து நிகழ்ச்சி தொடங்குமுன் கதிரை அடுக்கி, பொருட்கள் அகற்றி, பின்னணி வேலைகளில் முழுப்பங்காற்றி, நிகழ்ச்சி முடிய மறுபடியும் அடுக்கியும், பெருக்கியும் சுத்தப்படுத்தியும் விட்டுத்தான் போவார். எத்தனையோ திறமைகள் அவருக்கே இருந்த போதும், மற்றவர்களை முன்னுக்கு விட்டு மற்றவரின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதிலேயே குறியாக இருந்தார். நான் என்ற மமதை தலைவிரித்தாடும் இந்தக்கால கட்டத்தில் பின்னால் நின்று ஊக்கமும் உதவியும் அளித்து மற்றவரை முன்னால் நிறுத்திப் பார்த்துப் பெருமைப்படும் வரதரின் குணம் நாம் எல்லாம் பின்பற்றவேண்டிய குணம்.

எமது முதியோரை வலுவூட்டுவதில் லண்டனில் ஓரளவு வெற்றி பெற்றதும், அவர்கவனம் நம் தாயகத்து முதியவரிடம் திரும்பியது. மட்டக்களப்பில் தான் வெளிநாட்டுதவி மிகக்குறைவு என மதிப்பிட்டு, அங்கே அவர் கவனம் திரும்பியது. 2012 அளவில் அக்கரைப்பற்று மாவட்டத்தில் சொத்து இழந்த குடும்பங்களைச் சேர்ந்த முதியவர்கள், பிள்ளைகளுக்குப் பாரமாக இருக்க விரும்பாமல் பகலில் மரநிழல்களுக்கு கீழே இருந்து, உணவு கிடைத்தால் உண்பது இல்லாவிட்டால் அதிலேயே படுத்து உறங்குவதும், சிலசமயங்களில் அப்படியே இறந்து போவதாயும் *CCD*யுக்குத் தகவல் கிடைத்தது. உடனே இப்படியான முதியவருக்கு 7 நாளும் *Day Centre* அமைத்துப் பராமரிக்க விரும்பினார். பணம் போதவில்லை.

அப்போதுதான் திருக்கோவில் கிராமத்தில் கவனியாது விடப்பட்ட ஒரு *multipurpose government building* எடுத்து, கஷ்டப்படும் சில முதியவர்களுக்குத் தங்க இடமும், உண்ண உணவும் பகிர்ந்து கொடுத்து உதவும் ஒரு வயதான ஜோடியை இலங்கை போயிருந்த போது சந்தித்தார். அந்தநேரம் அவர்களுக்கு சிறிது காலம் கிடைத்திருந்த வெளி நாட்டுதவியும் வரண்டு போயிருந்தது. உடனே *EEP* யின் உதவியோடு இரண்டு கறவைப் பசுக்களும் கன்றுகளும் வாங்கிக் கொடுத்து, உடைகளும் அன்பளிப்புச் செய்தார்.


பின்னர் தான் தனியாக வெளிநாட்டு உதவியை மட்டும் எதிர்பார்த்து இராமல் உள்ளூர் பிரமுகர்களும், அரசும் தங்களது வலுவிழந்த மக்களுக்கு மனிதாபிமான உதவியைச் செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்று முடிவு செய்தார். மேலும் *EEP* யின்குறிக்கோள் இந்த மக்களுக்குத் தம்மைத் தாமே வலுவூட்டிக் கொள்ளும் வழிகளையும் காட்டிக்கொடுப்பதாய் இருக்க வேண்டும் என முடிவெடுத்தார்.

பின் 2015ல் குறிஞ்சாமுனையில் *Inpalaya drop-in centre* ஆரம்பிக்கப் பட்டது. சுற்றியுள்ள 6,7, கிராமங்களில் தனிமைப் படுத்தப்பட்ட வயோதிபருக்கு உணவும் மருத்துவ ஆலோசனையோடு ஒரு வாசிக சாலையும் கட்டிக்கொடுப்பது என முடிவானது. அவரது நோக்கம் *London EEP drop-in Centre* மாதிரி அதே *model* லில் இதுவும் இயங்க வேண்டும் என்பதே. ஆனால் நடைமுறையில் அது உணவு சமைத்துப் பரிமாறும் மடமாக மட்டுமே மாறியது. அத்துடன் இலவச உணவு கிடைக்கிறது என செய்தி பரவி கட்டுப்படுத்த முடியாத அளவு ஆட்கள் வரத்தொடங்கியதால் அந்த முயற்சியை நிறுத்த வேண்டியதாயிற்று.

அதன் பிறகுதான் செங்கலடியில் 5 முதியோர் சங்கங்களைச் சேர்த்து, அந்த முதியோரின் திறமைகளை ஊக்குவித்து அவர்களுக்கு ஒரு வாழ்வாதார வசதியும் ஏற்படுத்திக் கொடுக்க விரும்பினார். திறமை இருந்தது, இரண்டு வருடம் நன்றாகவே வேலைகள் நடந்தன. மறைந்து வரும் நாட்டுக்கூத்துக் கலைக்கு புத்துயிர் கொடுக்கவும், கவிஞர் ஒருவரின் கவிதைத் தொகுப்பை வெளியிடவும் நேரிலேயே சென்று பெரிதும் முயன்றார். நினைத்தளவு வெற்றி கிடைக்கவில்லை.

ஆனாலும் அவர் ஓயவில்லை. அவரது இறப்புக்குமுன் கடைசியாக இலங்கை சென்றிருந்தபோதும் மட்டக்களப்புக்குச் சென்று *EEP* யின் ஒருங்கிணைப்பாளர்களோடு பட்டிப்பளை *DS Office*க்குச் சென்று அந்தக்கிராமத்துக்கு எப்படி உதவமுடியும் என ஆலோசித்த போது தான் தற்போது நாம் செய்யும் மல்லிகைத் தோட்டத் திட்டம் உருவாகியது. பிரபல்யமான கோவில்கள் நிறைய உண்டு. தேவையான பூக்கள் எல்லாம் மட்டக்களப்பில் இருந்துதான் வரவேணும். இங்கேயே பூந்தோட்டம் அமைத்தால் நல்ல *Demand* இருக்கும் எனச்சொல்லி *DS Office* மூலமாகவே இலவச காணியும் கிடைத்து, பல தடைகளுக்குப் பிறகு வேலையும் தொடங்கி தோட்டம் பூத்துக் குலுங்குகிறது. ஆறு கோயில்களுக்கு தற்போது இலவசமாக பூக்கள் கொடுக்கிறார்கள். *Lock Down* சட்டங்கள் தளர்ந்ததும் பலவித தேவைகளுக்கான மாலை கட்டும் பயிற்சி பெற்று இந்தத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு முதியோர் சங்க அங்கத்தினருக்கும் ஒரு சிறிய வாழ்வாதார ஒழுங்கைச் செய்யும் கடைசிக்கட்டத்துக்கு வந்துள்ளோம். கடைசி மூச்சுவரை அவர் உழைத்த திட்டமிது. அவர் எம்மோடு இல்லாவிட்டாலும் கூட *EEP* அவர் கனவை நிறைவேற்றிக் கொடுக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வரதகுமார் ஐயா அவர்களுடனான சில அனுபவங்கள்...




மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி பிரதேச பிரிவில் அமைந்துள்ள ஐந்து கிராமங்களில் உள்ள முதியோர் சங்கங்கள் ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கான தியானப் பயிற்சிகளுடன் ஆரம்பமான செயற்றிட்டத்தில் அமரர் வரதகுமார் ஐயா அவர்களின் தன்னலமற்ற சேவைகளை நாம் என்றுமே மறக்க முடியாது. ஒவ்வொரு சங்க உறுப்பினர்களையும் அவர் சந்தித்து உரையாடுவதிலும், அவர்களின் திறமைகளை இனங்கண்டு, அத்திறமைகளை வெளிக் கொணர்ந்து, அதனூடாக முதியோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயற்சிகள் பல மேற்கொண்டவர். அவருடன் இணைந்து சேவை செய்த காலங்களை நாம் எப்போதும் மறவோம். முதியோர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளை கேட்டறிந்து அப்பிரச்சினைகளை தீர்ப்பதில் மிக ஆர்வம் கொண்டவர்.

செங்கலடிக் கிராமத்தின் களுவன்கேணி என்னும் பிரதேசம் கடற்கரையை அண்மித்த பகுதியாகும். பிரதான வீதியிலிருந்து மிக நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கும். அங்குள்ள வீதிகள் மிகவும் மோசமான பயணிக்க முடியாதவை. அவற்றைக்கூட பொருட்படுத்தாமல் கரடுமுடரான பாதைகளில் எங்களுடன் முச்சக்கர வண்டியில் பயணம் செய்து பல முதியோர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களை சந்தித்து கலந்துரையாடியதை எம்மால் மறக்க முடியாது.

மட்டக்களப்பு நாட்டுக் கூத்து அழிந்து கொண்டு போகிறது என்ற கவலை அவருக்கு. இதனால் அதனை வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் உணர வேண்டும் என்று கருதி அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு CD வெளியிட்ட அனுபவம் பசுமையானது.

முதியோர் தினத்தை முன்னிட்டு ஒரு கண்காட்சி செய்யலாமா என்று கேட்ட போது அதனை மிகவும் வரவேற்றார். பாரம்பரியம் அழிந்து போகாத வகையில் பாரம்பரிய உணவு வகைகள், மூலிகை மற்றும் அதன் மருத்துவக் குணங்கள், பனை உற்பத்திப் பொருட்கள், நாட்டுக் கூத்திற்கு பயன்படுத்தும் ஆடைவகைகளும், பொருட்கள் என்று பல்வேறுபட்ட பொருட்களை காட்சிக்காக வைப்பது மட்டுமன்றி அவற்றை விற்பனை செய்து, முதியோர்களின் வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் முறையில் வழிகாட்டி, அதனை சிறப்பாக செய்து முடிக்க லண்டனில் இருந்து கொண்டு வழிகாட்டியதை எம்மால் என்றும் மறக்க முடியாது. கண்காட்சி இப்போதும் எமது கண்களில் காட்சியாக ஓடிக்





கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல நாங்கள் செய்யும் ஒவ்வொரு செயற்பாடுகளையும் அவர் எங்களை பாராட்டும் விதம் மறக்க முடியாது. தர்மநாயகி, விஜி என்று அழைக்கும் குரல் இப்போதும் எமது காதுகளில் ஒலிக்கிறது. இவைகள் என்றுமே எமக்கு நீங்காத நினைவுகள் தான்.

செங்கலடி கிராம முதியோர்களின் மனங்களில் இடம் பிடித்துக் கொண்ட அமரர் திரு. வரதகுமார் அவர்கள் எங்களின் வேண்டுகோளுக்கிணங்க பட்டிப்பளை கிராம முதியோர்களின் வாழ்க்கையுடனும் இணைய விருப்பம் கொண்டு இங்கு வருகை தந்தார்

இதைப் போன்று முதியோர்களுக்கான சித்திரைப்புத்தாண்டு நிகழ்வினை கலாச்சார விளையாட்டுக்களுடன் ஐயாவின் வழிகாட்டலின் கீழ் நடத்தி முடித்தோம். அத்துடன் மட்டக்களப்பு தொடர்பான வரலாறு கலாச்சாரம் மான்மியம் தொடர்பான புத்தகங்களை பொக்கிஷங்களாக இறுதிப் பயணத்தின் போது எடுத்துச் சென்றார்.

பட்டிப்பளை கிராமத்தின் பிரதேச செயலாளரை சந்திக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டதும் உடனடியாக எங்களுடன் வந்து, GA சந்தித்து உரையாடும் போது மட்டக்களப்பில் மல்லிகைப் பூக்களின் பற்றாக்குறை முன்வைக்கப்பட்டது. கலாசார நிகழ்வுகள், கோவில்களுக்கு பூக்கள் மற்றும் பூமாலைகளின் தேவை காணப்படுவதாகவும், இதனை முதியோர் சங்கங்களினூடாக செயற்படுத்தும் போது அத்தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன், முதியோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டமாக அமையலாம் எனவும் கலந்துரையாடப்பட்டது. பட்டிப்பளை பிரதேச செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட மகிழடித்தீவு கிராம கோவில் வளவில் தற்போது அமைக்கப்பட்டுள்ள மல்லிகைத் தோட்டம் அமரர் வரதகுமார் அவர்களின் கனவாகும். அவரின் கனவை நாங்கள் தற்போது நிறைவேற்றியுள்ளோம். இதற்கு மூலகாரணம் EEP உறுப்பினர்கள் மாத்திரமே Covid - 19 இனால் தற்காலிகமாக தடைப்பட்டு, தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல இம்மல்லிகைத் தோட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வேறு பல பிரதேசங்களுக்கும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று அன்று அமரர் வரதகுமார் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதனை வரும் காலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறோம். இதனூடாக EEP செயற்றிட்டம் மேலும் விரிவடைந்து அமரர் வரதகுமார் அவர்களின் ஆசை நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

அமரர் வரதகுமார் அவர்களைப் பற்றியும் அவர்களது சேவை பற்றியும் கூறிக் கொண்டே போகலாம். முதியோர்களுக்குமட்டுமல்ல, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்றும் ஆசை கொண்டவர். ஒரு தடவை எங்களுக்கே தெரியாமல் குறிப்பிட்ட பிரதேசத்திற்குக் கூட்டிக் கொண்டு சென்று போரினால் பாதிக்கப்பட்ட இளம் பெண் ஒருவரை சந்தித்து அவரின் தேவைகளை கேட்டறிந்து அவருக்கு உதவிய விதம் இன்றும் மறக்க முடியாது. அப்படி எத்தனையோ மனிதர்களுக்கு எத்தனையோ உதவிகளைச் செய்து முடித்த அமரர் வரதகுமார் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்து முடிக்கின்றோம்.





திருமதி. தர்மநாயகி ஹரிகரன்
திருமதி விஜயபரணி ஜயசுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Honouring Varadakumar's legacy with hopeful activism

## Dr Rachel Seoighe

In these difficult times, and reflecting on the second anniversary of Varadakumar's death, I want to offer a few words about hope and memory, about embracing the challenges of the future with the rich resources of the past. I feel that Varadakumar left us coordinates by which to organise, to work together, and to make sense of the activism we engage in. This was his gift and his legacy, and we would be wise to reflect and honour them.



Virginia Woolf once said in her diaries that "the future is dark, which is the best thing the future can be, I think." This is to say that we always act in the dark. It is to say that in the unknowability of the darkness, there is possibility. We don't know what is to come and we don't know what effect our actions will have. Rebecca Solnit uses Woolf's idea to argue for hope in activism, to be hopeful when we pursue justice and try to bring about change. "We don't have the memory of the future," she says. The dark of the future is a hopeful darkness. Our actions in the present moment may be insignificant, but they might be world-changing. The effects of our actions, our words, our conversations may unfold in ways we can't foresee or even imagine.

As we know from the presence of Varadakumar in our lives despite his passing, our words and actions may continue to articulate, influence and unfold after we are gone. Varadakumar is still alive in so many imaginations. He still shapes our thinking, our relation to one another, and acts with and through us. He still inspires and charts a principled and hopeful path. Learning from Varadakumar, we can invest in a hope grounded in rigour, the careful nurture of relationships and a life lived with and for people.

Sustaining hope these days, as Tamils and for those who work alongside Tamils for justice, in the long aftermath of the horror of Mullivaikkal, is challenging. Working, waiting and praying - ritual by ritual, year by year – this is the stuff of exhaustion, the slow grinding down of hope. Much of the time, the powerful set the clock and we are all subject to its slow violence. But the grounds for hope, if we follow Solnit's thinking, are simply that we don't know what will happen next, and that the unlikely and the unimaginable do come about – even, when you look closely, and with the right lens, quite regularly.

There is an unofficial history of the world, Solnit reminds us – one that is not necessarily celebrated and documented in the pages of history books, written by white male academics fascinated by sharp victories and domination. The more subtle history shows that dedicated individuals - and the movements they are part of - shape history in significant ways. This is sometimes indirect, sometimes tectonic, often understated. History follows a long arc, and the effects of one's actions can take years, or even decades, to come to realisation. I wonder, like Solnit does, if we can gather hope and motivation from uncertainty. Despair is a form of certainty, mapping hopelessness onto an unwritten future. Optimism, in contrast to hope, is a certainty that renders us inert and convinces us not to try.

Conversations with Varadakumar, for me, are an exchange with no end-point. His legacy is his determination, his rigorousness, his hopefulness. His echo of "we must do something for our people." The struggle for justice and accountability is hard-headed work. But there was a softness, a tenderness in his insistence that we also do what we can for people, to work towards improving the conditions of life in the homeland. He insisted that life should be more than surviveable.




Thinking about Varadakumar's legacy, I think of the role of elders in shaping how historical, political and cultural memory is preserved in the present and passed to the younger generation. And how the memory of elders – their words and wisdom - animates activism. The writer Anne Rigney tells us that "remembering the past, shaping the future remembrance of the present, and struggles for a better future feed into each other." How we remember matters. The narratives we adhere to and mobilise, how we honour and stay true to the wisdom of our elders while charting a distinctive path towards justice.



Varadakumar was an archive. An archive of stories, dialogues, principles and relationships, an archive of lived experience and actions. An archive of activity, inspiration and creativity, not only documentation. By remembering Varadakumar's work, his way of being with people and his principles – by folding these into our activism, our determination, our hopefulness - we are preserving and awakening his legacy.

Varadakumar offered us a gift in his final months, as many of us worked on the Tamils of Lanka exhibition – first with him, and then, suddenly, as a tribute to him. He left us an expansive conception of how the hope, resilience and cultural wealth in the Tamil community can be mobilised as resources towards a better future. He gave us everything we need to honour his legacy. He spelled out his vision – a future informed by the past, in a hopeful narrative of Tamil resilience and resistance, a struggle not only for survival, but for liberation, innovation, brilliance and creativity. He also gave us a new sense of togetherness.


We all remember Varadakumar in our own, personal ways. Moments of closeness and laughter, moments of insight and deep discussion, particular thoughtful or mischievous expressions captured in snapshots of memory. I know I have mine and I cherish them. Reflecting on Varadakumar's legacy and honouring him, we can be inspired and heartened and invest our hope in changing the future.

**References**

*Rigney, A. (2018) "Remembering Hope: Transnational Activism beyond the Traumatic." Memory Studies 11(3), 368–80.*

*Solnit, R. (2014) "Woolf's darkness: embracing the inexplicable" in Men Explain Things to Me. London: Granta Books, 85-108.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அமரர் வரதகுமார்


## அவர்களின் 2ம் ஆண்டு நிகழ்வுப் பதிவுகள் சில...

**பிரித்தானியாவில்......(ZOOM)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# அமரர் வரதகுமார்


## அவர்களின் 2ம் ஆண்டு நிகழ்வுப் பதிவுகள் சில...

**தாயகத்தில்......**

**(பல்லவராயன்கட்டு கிளிநொச்சி)**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VARADAKUMAR SERVED HIS PEOPLE WITH DILIGENCE




THE RT HON JEREMY CORBYN MP
LEADER OF THE OPPOSITION

HOUSE OF COMMONS
LONDON SW1A 0AA

FAO Mr Anuraj
Tamil Information Centre
Thulasi
Bridge End Close,
Kingston Upon Thames,
KT2 6PZ

25 March 2019

**Vairamuttu Varadakumar, 1949 – 2019**

The Tamils have lost a Trojan: Vairamuttu Varadakumar spent his life in service to the Tamil cause, defending human rights and fighting the unjust deportation of refugees. The world is a much poorer place for his passing.

I met Vairamuttu during my early years in Parliament in the 1980s, a time when many Sri Lankans came to the UK fleeing the civil war. Vairamuttu was a self-effacing yet articulate man, who fought tirelessly for the rights and freedom of Tamil people – he advocated for the rights of individual refugees here in the UK, but never lost sight of the bigger picture of the Tamil people's struggle for self-determination. For the short time that MPs were able to exert any direct influence on such immigration cases, with Vairamuttu's help, I was able to offer support to many of these displaced and deserving people. It was a privilege for Liz Phillipson and myself to work with him in the midst of desperate pressure at a desperate time for Tamil people.

Vairamuttu painstakingly advocated each individual case, always underlining that it was the political and human rights context that created refugees, not the people themselves. I visited Sri Lanka in 1984 to see the situation for myself; regular updates thereafter from the Tamil Information Centre helped to keep me, and many others, abreast of the situation.

This is a very sad occasion. Vairamuttu's sudden passing came as a terrible shock and I extend my deepest condolences to all his friends and family. He was a great man, who served his people with diligence and total commitment. We mourn his loss.

Rt Hon Jeremy Corbyn MP
Leader of the Opposition

மீட்சி

ஜனவரி – மார்ச் 2021 காலாண்டு இதழ் – 01




## மீட்சியின் குரல்....

தமிழ் தகவல் நடுவத்தின் வெளியீடான 'மீட்சி' தற்போது காலாண்டு Epaper வடிவில் வெளிவருகின்றது.தமிழ் தகவல் நடுவத்தின் நிர்வாக இயக்குனர்களில் ஒருவரான அமரர் வரதகுமார் அவர்களின் 2ம் ஆண்டு நினைவுச் சிறப்பிதழாக முதலாவது காலாண்டு இதழ் வடிவமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் மீட்சியில்...

அரசியல், சமூகமாற்றம், பொருளாதாரம், மனித உரிமைகள், தமிழ்ப்பண்பாட்டின் நீட்சிகள், ஈழத்துப் படைப்புக்கள், ஈழத்துச் சிற்பிகள், இலக்கியச் சுவை, சமூகத்தின் டயறி, களத்தில் -புலத்தில் இளையதலைமுறையின் சமூகப்பணி, தமிழ்க்கட்சிகளின் பயணம்...... என பல்வேறு பகுதிகள் இடம்பெறவுள்ளன. இப்பகுதிகளுக்குரிய படைப்புகளைப் பல்வேறு தளங்களில் படைப்பாளிகளிடமிருந்தும் வாசகர்களிடமிருந்தும் வரவேற்கின்றோம்.

ஆசிரியர்
கே.எஸ் சுபாஸ்

இணை ஆசிரியர்
மாதுமை

நிர்வாகம் மற்றும் மேற்பார்வை
வே. ஜெ போஸ்
vjbose@gmail.com

வடிவமைப்பு
செ. நிசாகுலன்

புகைப்படம்
ரகு. குமணன்

தட்டச்சு மற்றும் ஒப்புநோக்குனர்
பல்லவி

தொடர்புகளுக்கு
editormeedchiuk@gmail.com

வெளியீடு
தமிழ் தகவல் நடுவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவில் இலண்டன் மாநகரில்..

# 'தமிழ் அருங்காட்சியகம் இலண்டன்'

### உருவாகுவதற்கு அனைவரும் இணைந்து செயற்படுவோம். வாருங்கள்...

தமிழ்


தமிழ் அருங்காட்சியகம் இலண்டன்
TAMIL MUSEUM LONDON

## தமிழால் இணைவோம் தமிழை அறிவோம்

- தமிழ் அருங்காட்சியகம் இலண்டன் நிர்வாகம்.

# Guaranteed Rent

## Property management all over London





*Selling or Letting?*



Our success is built on our reputation of **excellent customer service** for over **20 years**...

Call us today to find out how we can look after you and your investment:

**020 8470 1500**

www.select.london

SELECT.LONDON


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ நா மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஈழத்தமிழ் மக்களும்

**காவியா**



ஐ.நா சபையின் அமையங்களில் ஒன்றான ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. உலக நாடுகளில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்களை கண்காணிப்பதற்கும், குறித்த நாடுகளுக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டுக்குள்ளும் இருந்தே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவால் மனித உரிமைகள் மீறலை மேற்கொள்ளும் நாடுகளுக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பிக்கும். அநேகமாக இந்த அறிக்கைகள் மென்போக்கு கொண்டவையாகவே காணப்படும்.

இலங்கையில் 1970 களின் தொடக்கத்தில் உருவான தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டமானது வீறு பெற்று எழுந்தபோது இந்தியா தனது பிராந்திய நலனை கவனத்தில் கொண்டு இலங்கையில் இருந்த தமிழ், சிங்கள இனமுறுகலை தனக்கு சாதகமாக பயன்படுத்த எண்ணியது. தமிழீழ விடுதலைக்காக உருவாக்கிய பல்வேறுபட்ட இயக்கங்களையும், அழைத்து திம்புவில் பேச்சுவார்த்தைக்கு ஒன்றிக்கு ஏற்பாடு செய்தது. அந்தப் பேச்சு வார்த்தையில் விடுதலைபோராட்ட இயக்கங்களும் அன்றைய அரசியல் தலைவர்களும் கலந்துகொண்டனர். ஆனால் திம்பு பேச்சுவார்த்தையானது 17/08/1985 ஆம் ஆண்டு தோல்வியில் முடிவடைந்ததை அடுத்து தாயகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வேகமான போராட்டத்தை முன்னெடுத்தமையால் ஈழ விடுதலைப்போராட்டத்தின் தவிர்க்கமுடியாத சக்தியாக உருவெடுத்தனர்.

தமிழீழ போர் உச்சம் கண்ட பனிப்போரின் இறுதிக்காலகட்டத்தில் இந்தியா தனது இராணுவத்தை இராணுவம் இலங்கைக்கும், சோவியத் யூனியனின் தனது இராணுவத்தை ஆப்கானிஸ்தானுக்கும் அனுப்பி வைத்தது. 1990 களில் பனிப்போர் முடிவுற்ற காலத்தில் அந்தந்த நாட்டு இராணுவங்கள் மீள பெறப்பட்டதும் சோவியத் யூனியனில் இருந்த 18 தேசிய இனங்கள் விடுதலை பெற்று உலக வரைபடத்தில் 18 நாடுகள் புதிதாக தோற்றம் பெற்றது.

பனிப்போரின் இறுதிக் காலத்தில் இந்திய இராணுவம் இலங்கையில் தமிழ்மக்களின் மீது நடத்திய கொடூரமான தாக்குதல்களும், பாலியல் கொடுமைகளும் விடுதலைப்புலிகளை முற்றுமுழுதாக அழித்துவிடவேண்டும் என்கின்ற பிழையான இந்திய அரசியல்வாதிகளின் அணுகுமுறையும் இந்தியாவிற்கும் விடுதலைப்புலிகளும் இடையில் மிகப்பெரியதோர் இடைவெளியை உருவாக்கி விட்டது.



இந்தியாவிற்கும் விடுதலைப்புலிகளும் இடையில் விழுந்த இடைவெளியை சரியான முறையில் அணுகி ஆராய்ந்து தெளிவுபடுத்த விடுதலைப்புலிகள் தரப்பிலும், இந்தியாவின் மத்திய அரசின் தரப்பிலும் சரியான அணுமுறைகள் மேற்கொள்ளாமல் விடுபட்ட இடைவெளிகளின் நீட்சியுமாக சேர்ந்து விடுதலைப்புலிகளுக்கும், இந்தியாவிற்கும் மிகப்பாரியதொரு இடைவெளியை உருவாக்கி விட்டது.

2001 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளும் சிங்கள அரசும் ஒஸ்லோ பேச்சுவார்த்தைக்கு தயாராக இருந்த காலத்தில், பிரித்தானியாவால் 2001 மாசி 28 ஆம் திகதி விடுதலைப்புலிகளை பயங்கரவாத இயக்கமாக சுட்டிக்காட்டி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்ட நடவடிக்கையானது மனித உரிமைகளை தாம் மதிப்பதாக கூறும் மேற்குலக நாடுகளின் முகத்திரையை இலகுவாக ஈழத்தமிழ்மக்களுக்கு தோலுரித்து காட்டியது.

விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பாக தடைசெய்த காரணமே இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்களின் எண்ணிக்கையில் அண்ணளவாக 20 சதவீதமான மக்களின் உயிரை சிங்கள அரசு பறிக்கவும், மனித இனவழிப்பை மேற்கொள்ளவும், பாலியல் ரீதியான துன்புறுத்தலை மேற்கொள்ளவும் காரணமாக அமைந்தது.

மேலும் சமாதான காலத்தில் ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப்போராட்ட இயக்கமானது பயங்கரவாத இயக்கமாக தடைசெய்யப்பட்டபோதும் அன்றைய காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் சார்பாக புலம்பெயர் தேசங்களில் செயற்பட்ட அமைப்புகளும், விடுதலைப்புலிகளின் முகவராக தம்மை வெளிக்காட்டிய நபர்களும் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க ஆக்கபூர்வமான நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பது வேதனைக்குரிய உண்மையாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதம் வரைக்கும் இந்த நூற்றாண்டின் வரலாற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக மோசமான பக்கமாக ஈழத்தமிழனத்தின் எண்ணிக்கையில் அதிகளவு சதவீதமான மக்கள் இறக்கவும் திட்டமிட்ட சிங்கள அரசின் தமிழ் மக்கள் மீதான இனவழிப்பு நிகழவும் பிரித்தானிய அமெரிக்க, சீன, இந்திய பாகிஸ்தானிய நாடுகள் துணைபோயின.

இந்த இனவழிப்பிற்கு தீர்வு காணும் முகமாக கடந்த 12 ஆண்டுகளாக நீதிக்கான விசாரணைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் காலத்திற்கு காலம் நிகழ்ந்தவண்ணம் உள்ளது.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த தமிழர்களுக்கு எதிரான மனித உரிமைகள் மீறல் பற்றிய தீர்மானம் 2010 ஆம் ஆண்டு ஐ நா மனித உரிமைகள் சபைக்கு வந்தபோது இலங்கைக்கு சார்பாக 29 நாடுகளும், இலங்கை இராணுவம் நிகழ்த்திய மனித உரிமைகள் மீறலை எதிர்த்து 12 நாடுகளும் வாக்களித்தது. 6 நாடுகள் நடுநிலையை வகித்தது.

2012 ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் மீறலுக்கு எதிராக 23 நாடுகளும், இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் மீறலுக்கு ஆதரித்து 15 நாடுகளும் வாக்களித்தது. 9 நாடுகள் நடுநிலையை வகித்தது.

2013 ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைக்கு எதிராக 25 நாடுகளும், ஆதரவாக இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் மீறலுக்கு 13 நாடுகளும் வாக்களித்தது. 9 நாடுகள் நடுநிலையை வகித்தது.

2014 ஆம் ஆண்டு இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமைகள் மீறலுக்கு எதிராக 23 நாடுகளும் ஆதரவாக 12 நாடுகளும் வாக்களித்தன. 12 நாடுகள் நடுநிலையை வகித்தது.

கடந்த 2014 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இலங்கையில் அந்த நாட்டிற்குள் தீர்வுகாண பொறிமுறை ஒன்றினை உருவாக்கவேண்டும் என்ற தீர்மானத்தை தமிழரசியல் கட்சிகளின் சூத்திரதாரியாக செயற்பட்ட சுமந்திரன் எடுத்து சென்றதும் அதற்கு புலம்பெயர் தேசத்தில் இருந்து ஐக்கிய நாடுகள் சபையை நோக்கி பணிபுரிவதாக கூறிய சிங்கள அரசின் அமைப்புகளும் மறைமுக சிங்கள அரசின் சார்புநிலை அமைப்புகளும் துணைபோய் 2010 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டுக்குள் ஈழத்தமிழர்களுக்கு கிடைக்கவிருந்த சுபிட்சமான வாழ்வியலை நல்லாட்சி என்கின்ற பொறிமுறைக்குள் சிக்கவைத்து ஈழத்தமிழனத்தின் மொத்தமான அழிவிற்கும் தமிழர் தாயக பிரதேசங்களான கிழக்கு மாகாணத்தை 90 சதவீதமளவில் வேற்று பண்பாட்டினை கொண்ட மக்கள் ஆளுமைப்படுத்தவும் வழியமைத்துக் கொடுத்தது.

இவ்வாறான ஒரு சூழலில் இலங்கையில் மீண்டுமொரு சீனா இந்திய மேற்குலக நாடுகளின் பனிப்போர் உருவாக்கக்கூடிய காலத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வெளிவந்த மனித உரிமைகள் அமையத்தால் இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக 22 நாடுகளும் ஆதரவாக 11 நாடுகளும் நடுநிலையாக 14 நாடுகளும் வாக்களித்தன. இந்த நிலையானது இதுநாள்வரையிலும் ஐ நாவை நோக்கி பணிபுரிந்து கொண்டிருப்பதாகவும் சிறிய நாடுகளை நோக்கி பணியாற்றிக்கொண்டு இருக்கின்றோம் என்று அறிக்கைவிட்ட அனைத்து தரப்பையும் நோக்கி கேள்விக்கணைகளையே தொடுகின்றது.

எரித்திரியா, கியூபா , லிபியா ஆகிய நாடுகள் புரட்சிகள் மூலம் விடுதலையை பெற்ற நாடுகள் கூட ஒரு விடுதலைபெற துடிக்கின்ற இனமக்களுக்கு ஆதரவை நல்கவில்லை என்பதன் ஊடாக ஈழத்தமிழ்மக்கள் இன்னும் தமது இராசத்தந்திர நகர்வை மேற்கொள்ளவில்லை என்பதையே நாம் அறிந்திட முடிகின்றது.

எரித்திரியா தமக்கு அனைத்துவிதமான ஆதரவையும் அளிப்பதாக புலம்பெயர் அமைப்பொன்று கடந்த காலங்களில் மார்தட்டியதை யாரும் மறந்திருக்க முடியாது. அதேபோன்று கடந்த 12 வருடமாக இந்தியாவை நோக்கி பணியாற்றிகொன்டு இருப்பதாகவும், ஐநா மனித உரிமைகள் சபைக்குள் நீண்ட நெடிய காலமாக பணியாற்றிக்கொண்டு இருப்பதாகவும் புலம்பெயர் அமைப்புகள் பலவும் உரிமை கோரியமையும் இங்கே கவனிக்கத்தக்க வேண்டியதொன்றாகும்.

ஆனாலும் இன்றைய சூழலில் இந்தோ பசுபிக் நாடுகளாக இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான் ஆகிய மூன்றும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டினை எடுத்திருக்கவேண்டிய சூழ்நிலையில் நடுநிலை வகித்தது என்ற நிலைப்பாட்டில் இருந்து ஈழத்தமிழர்கள் அரைவாசி கிணற்றை கூட இன்றுவரை தாண்டவில்லை என்பதையே உணர முடிகின்றது.

ஆகவே இந்துசமுத்திர பிராந்திய இன்றைய கொதிநிலையில் இப்போது வெளிவந்துள்ள மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் வரையறைக்கு உட்பட்ட மனித உரிமைகள் ஆணையத்தால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்தை இட்டு பெருமை கொள்ளவோ அல்லது ஏதோவொரு நாட்டினை புறணி கூறவேண்டிய தேவைப்பாடோ ஈழத்தமிழர்களுக்கு வேண்டியதொன்றல்ல.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னரே தமிழர்களுக்கு கிடைக்கவிருந்த நீதியையும், நியாயத்தையும் சிங்கள அரசிற்கு காணிக்கையாக்கிய தமிழரசியல்வாதிகளை பற்றி மட்டுமே இப்போது தமிழ்மக்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்கவேண்டும்.இவர்களை தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்கு அப்பால் ஈழத்தமிழர்களின் அரசியல் கட்சிகளும் அந்த அரசியல்கட்சிகளை இயக்குகின்ற புலம்பெயர் தேசத்தில் உள்ள பினாமிகளும் தமிழ்மக்களின் நலனை மட்டுமே கவனத்தில் கொண்டு இந்தோ பசுபிக் எல்லைக்குள் உட்பட்ட நாடுகளில் எந்த எந்த நாடுகள் ஈழத்தமிழர்களின் மனித உரிமை மீறல் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்து இருக்கின்றன என்பதை கவனத்தில் கொள்வதுடன் அவற்றை ஆதரவு சக்திகளாக மாற்றிட பாரிய பணித்திட்டம் ஒன்றினை முன்னெடுத்தது செல்ல வேண்டும்.

அத்துடன் இந்தியாவை நோக்கி எந்த கட்சி அரசியல் பேதங்களும் இன்றி அனைத்து தமிழரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து

தமிழர்களுக்கு என்று தெளிவான ஒரு வெளியுறவு கொள்கையுடன் இந்திய மத்திய அரசை நோக்கி பணியாற்ற தயாராக வேண்டும்.

2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரவிருக்கின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமர்விற்கு முன்னதாக தமிழ்மக்கள் சார்ந்து ஒற்றைக் கொள்கையுடன் தமிழரசியல் கட்சிகள் அனைத்தும் பயணிக்க வேண்டும்.


## Voting at UN HRC Resolutions on SL by 47 governments

| | 2009 | 2012 | 2013 | 2014 | 2015 2017 2019 | 2021 |
|---|---|---|---|---|---|---|
| Supporting SL Govt | 29 | 15 | 13 | 12 | Consensus (No Voting) | 11 |
| Against SL Govt | 12 | 23 | 25 | 23 | | 22 |
| Abstention | 6 | 9 | 9 | 12 | | 14 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மவர்

## என். செல்வராஜா



| | |
|---|---|
| பெயர்: | நடராஜா செல்வராஜா (என்.செல்வராஜா) |
| பிறந்த ஆண்டு: | 1954 |
| பிறப்பிடம்: | தண்டுகம, கொழும்பு மாவட்டம், இலங்கை. |
| புலம்பெயர்வு: | 04.10.1991 |
| புகலிடம்: | ஐக்கிய இராச்சியம் |
| புகலிடத்து முகவரி: | Luton, Bedfordshire, England. |

### தொழிற்றுறை:

- யாழ்ப்பாணம் இராமநாதன் பெண்கள் கல்லூரி, நூலகர் (மே 1978-ஏப்ரல் 1979)
- யாழ்ப்பாணம் சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ்மாவட்ட நூலகப் பொறுப்பாளர். (ஏப்ரல் 1979-ஜனவரி 1980)
- இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகர், திருகோணமலை மாவட்டம். (பெப்ரவரி 1980-பெப்ரவரி 1981)
- இந்தோனேசியா, ஐக்கிய நாடுகள் சபையின் (UNDP Volunteer Project) கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதி (பெப்ரவரி 1981-பெப்ரவரி 1982)
- இலங்கை சர்வோதய சிரமதானச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட மத்திய நூலகப் பொறுப்பாளர் (மார்ச் 1982- நவம்பர் 1983)
- யாழ்ப்பாணம், திருநெல்வேலி, ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் (Evelyn Rutnam Institute for Inter cultural Studies) ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளர். (டிசம்பர் 1983-டிசம்பர் 1989)
- கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலையம், (International Centre for Ethnic Studies) ஆய்வு நூலகப் பொறுப்பாளர் (ஜனவரி 1990-ஒக்டோபர் 1992)




### தற்போதைய தொழில்:

1993 முதல் ரோயல் மெயில் நிறுவனத்தின் (Royal Mail Group) - அந்நிய நாணயப்பிரிவில் நீண்டகாலம் உள்ளகப் பிரிவு அதிகாரியாகப் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.

### வகித்த, வகிக்கின்ற பதவிகள்- சமூகப் பணிகள்:

- ஸ்தாபகர், நிர்வாக இயக்குநர், அயோத்தி நூலக சேவைகள், யாழ்ப்பாணம். (தாபிதம்1985)
- இலண்டன், தமிழர் தகவல் நிலையம், இயக்குநர் நூலக சேவைகள், ஆவணக்காப்பகப் பிரிவு. (1992-1997)
- நூலகவியல்: காலாண்டுச் சஞ்சிகை: தாபக ஆசிரியர் (1985-1991)
- தொகுப்பாசிரியர் நூல்தேட்டம் (1990- )

## விருதுகள்


நாளைய சந்ததியின் இன்றைய சக்தி
'சிந்தனை வட்டம்'
தனது 200வது நூல் வெளியீட்டு விழாவின் போது;
ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில்
ஈழத்துத் தமிழ்நூல்களை ஆவணப்படுத்தும் பாரிய
பணியினை தனியொருவராக நின்று
'நூல்தேட்டம்' என்னும் நூல் தொடரை
வெளியிட்டுச் சாதனைபடைத்து வரும்
மூத்த நூலகவியலாளரும்,
பன்னூலாசிரியரும், எழுத்தாளருமான
திருவாளர் என். செல்வராஜா
அவர்களது இலக்கிய பணியின் மேன்மைக்காக
'எழுத்தியல் வித்தகர்'
எனும் பட்டமளித்து இத்தால் கௌரவிக்கின்றது.












தமிழியல் விருது - 2012
எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற
ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகளைப் பாராட்டும் நோக்கில் நடாத்திய
தமிழியல் விருது – 2012
நிகழ்வின் போது
2011 ம் ஆண்டில் வெளிவந்த நூல்களுள்
சிறந்த ஆவணமாக்கல் நூலாகத் தெரிவு செய்யப்பட்ட
என்.செல்வராஜா எழுதிய
நூல் தேட்டம் எனும் நூலுக்கு
கலைஞர் ஓ.கே.கணபதிப் பிள்ளை தமிழியல் விருது
வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
20.10.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாழ்ப்பாணப் பொது நூலகம். ஆலோசனைக்குழு (1991- )
- புக்ஸ் அப்ரோட் நிறுவனம், டண்டி, ஸ்கொட்லாந்து (2004-)
- ஸ்தாபகர், நிர்வாக இயக்குனர் – ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும் European tamil Documentation and Research Centre (2008-)
- லண்டன் தமிழ் புத்தகச்சந்தையும் எழுத்தாளர் வாசகர் சந்திப்பு நிகழ்வும் London Tamil Book Fair and Authors meet readers event. (2011)

## ஊடகவியல்துறை பணிகள்

**I.B.C. தமிழ் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட ஊடகங்களில் சஞ்சிகைகளில் எழுத்துப் பணி**

இலண்டனிலிருந்து வெளிவரும் தேசம், வடலி, புதினம், தென்றல் ஆகிய ஊடகங்களின் வாயிலாகவும் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல் மாதாந்த இதழ் வாயிலாகவும் தமிழ் பிரசுரங்கள், தமிழ் எழுத்தாளர் அறிமுகங்கள் பற்றிய தொடர் கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். இதன் வாயிலாக தாயகத்திலும், புகலிடத்திலும் உள்ள தமிழரின் படைப்புக்களை உலகெங்கும் அறிமுகப்படுத்தும் பணியினை முழு மூச்சுடன் மேற்கொண்டுவந்துள்ளார்;. தமிழரின் நூலியல்சார்குரல் நாடுகளின் எல்லைகளைக் கடந்து ஒலிக்க வேண்டும் என்பதே திரு.என்.செல்வராஜாவின் அடிப்படை நோக்கமாகும்.

## விருதுகள் - வாழ்த்துப் பத்திரங்கள்

1. கனடா தமிழர் தகவல் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட "தமிழர் தகவல் விருது 2004"ம் தங்கப் பதக்கமும்
2. கண்டி சிந்தனை வட்டம் வழங்கிய "எழுத்தியல் வித்தகர் விருது 2005"
3. அவுஸ்திரேலியா-தமிழ் இலக்கிய கலைச்சங்கம், வழங்கிய "சேவைநலன் பாராட்டு விருது 24.11.2007"
4. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டத்தாபனம்-தமிழ் 1997-2007 பத்தாவது ஆண்டு நினைவின்போது வழங்கப்பட்ட பணி மதிப்பளிப்பு விருது.
5. உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம்-இந்திய ஒன்றியம், சென்னை பாரதிய வித்யா பவனில் வழங்கிய வரவேற்புபசாரத்தின்போது வழங்கிய வாழ்த்துப்பத்திரம்- 29.01.2013.
6. தமிழியல் விருது 2012. மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய 2011இல் வெளிவந்த சிறந்த ஆவணமாக்கல் நூலுக்கான தமிழியல் விருது நூல்தேட்டம் தொகுதிக்கு வழங்கப்பட்டது.
7. லண்டன் தமிழினி குலேந்திரன் வழங்கிய 2013-வாழும்போது வாழ்த்துவோம் விருது சிறந்த நூலியலாளருக்கும் தொகுப்பாளருக்குமான விருது. (27.7.2013)
8. தமிழகத்தின் நாமக்கல் கு.சின்னப்பபாரதி விருதும் 10000 ரூபா சன்மானமும் இவரது நூல்தேட்டம் நூல் முயற்சிக்காக 2.10.2014 அன்று வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
9. IPRA 2017: First Honourable Mention- (Informed Peer Recognition Award ASLIB, 2017) பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு சேவையாற்றும் நூலக சேவையாளர்களுக்கான கௌரவ விருது.
10. இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கிய 'வவுனியூர் இரா.உதயணன் இலக்கிய விருது 2018"
11. புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு நற்பணி ஒன்றியம், ஜேர்மனி-05.10.2019 அன்று வழங்கிய 'தொண்டரின் திருமுரசு-1" ம் தங்கப் பதக்கமும்













TORONTO

Mayor David Miller
and Members of Toronto Council
extend congratulations to

N. Selvarajah

recipient of the Tamil Information Award.

Our Tamil community is an integral and vital part of the success and vitality that make Toronto a great place to live, work and play.

We recognize your twenty-five years of leadership and outstanding contribution as a librarian, writer, researcher and publisher.

Best wishes for much success in all your future endeavours.

David Miller — Mayor David Miller
Pam McConnell — Councillor Pam McConnell

February 13, 2005


ஏழைதாசன்


- திங்கள் இலக்கிய இதழ் -

11 - 4
சனவரி - 2003
இதழ் எண் : 103
விலை ரு. 3/-

மானுட போதனையாளர்!
நூலக சாதனையாளர்!

நூலகவியலாளர்,
என். செல்வராஜா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டெழுவோம் மீட்சிகொள்வோம்

எரிமலைகள் எப்போதும்
மௌனமாகவே இருக்கும்
வெடித்துக் கிளம்பும்வரை
முள்ளிவாய்க்கால் முடிவல்ல
முற்றுப்புள்ளி வைக்க

கொத்துக் கொத்தாய்-எம்மக்கள்
கொத்துக்குண்டுகளால்
கொன்று குவிக்கப்பட்ட போது
தடுத்து நிறுத்தாத உலகம்
இன்று தடுப்பூசிக்காய்
தவம் கிடக்கின்றது

வலி சுமந்து நிற்கின்றது
குருதி தோய்ந்த எங்கள் தாய் மண்
வித்தாகிப் போன மறவர்களின்
விடுதலையின் மூச்சுக்காற்று
எங்கள் சுவாசமாகிப் போனது
காணாமல் போன பிள்ளைகளின்
பெற்றோர்கள் வடிக்கின்ற இரத்தக்
கண்ணீர்
வீணாகிப்போகாது

பத்து வருடங்கள்
பட்ட துன்பங்கள்
வெடித்துக் கிளம்பியது

பொத்துவிலில் நெருப்பாய்
பதிய புறநானூறு படைக்க
புதிய எழுச்சி உருவானது

எங்கள் மண் எமக்கே சொந்தம்
தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ
பொத்துவில் தொடக்கம்
பொலிகண்டி வரையும்
மக்களின் எழுச்சி
தரணி எங்கும் புதிய பரணி பாடியது

அடம்பன் கொடியும் திரண்டால்
மிடுக்கு
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
மீண்டெழுவோம் மீட்சிகொள்வோம்
மீட்டெடுப்போம் எங்கள் தாய்
மண்ணை
அறிவாயுதம் கொண்டு
மறவர்களின் கனவை நனவாக்குவோம்
முள்ளிவாய்க்கால் முடிவல்ல
முற்றுப்புள்ளி வைக்க

கவிதை ஆக்கம்
ஈழத்துச் சித்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org